7001

ஸ்ரீ

# பகவத்கீதை வெண்பா.

வாதிகேஸரி

ஸ்ரீ அழகியமணவாள ஜீயர்

அருளிச்செய்தது.

MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY
THIRUVANMIYUR, MADRAS-41.

முதலாவது ஷட்கம்.

ஸ்ரீரங்கம்:
ஸ்ரீ வாணீ விலாஸ் பிரஸ்.
1906.

*Copyright Registered.*

GF
R66,6x1:V
D6.1

7001

Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY
TIRUVANMIYUR, MADRAS-41.

# INTRODUCTION.

WE have great pleasure in introducing to the Tamil reading Public this Bhagavad Gita Venba, one of the gems of Tamil literature hitherto hidden among the vast heaps of crumbling palm leaf manuscripts—a very common sight in the homes of many a Pandit in this country. We were really fortunate in coming across this Mss. copy of the book, with the kind help of Sriman Anbil S. Venkatachariar Avl., for, a study of this work will surely convince the readers that it is an exceedingly fine piece of literature—too precious to be consigned to oblivion. It is a very faithful and close rendering of the Gita written in the simplest possible style without at the same time impairing the richness of meaning found in the original. Being a highly philosophical work the author had necessarily to follow one of the numerous commentaries and himself a Vaishnava Acharya he has naturally followed Sri Ramanuja (*Vide* Stanza 4 of the

Pâyiram). He has tried his best and has almost succeeded in his earnest endeavours to bring out the force of the original and in places where he found any difficulty in choosing apt Tamil expressions he has adapted the Sanskrit words themselves. As the Gita is a highly esteemed religious work, the author has rightly chosen the sacred Venba metre which is generally supposed to be the Brahmin among the metres. If we find anything in this Venba which does not, at first sight, correspond to the original, a close examination reveals the same to us as nothing but explanatory of the text—in accordance with the Ramanuja Bhashya—adopted owing to poetical exigencies. From a literary point of view, we may safely assert, that this poem is unrivalled. As a matter of fact in several places the author has excelled the renowned Pugalenthi in the ease of diction, flow of style and harmony of language. Particular care is exercised in using full words only (without torturing them) in scanning;——what is called in Tamil as சொர்பிரித்தல். A perusal of the notes for the 1st chapter, which has been purposely made elaborate will clearly show how closely the author has followed

MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY
TIRUVANMIYUR, MADRAS-41
7001

his Sanskrit original—nay in some places has even tried to surpass it. In short, when we pause to consider the highly abstruse nature of the subject and the technical limitations of the Venba metre, it is certainly a matter for much wonder that the author has succeeded in a manner which nobody else can even dare to approach.

The author of this precious little gem is the famous Vadikesari Alakia Manavala Jeer, otherwise known as Sottai Manavala Mamuni as stated in the epilogue. Tradition describes his education as follows:—this Manavala was always serving Periya Vachan Pillai and once, in his 32nd year, when he questioned an assembly of Pandits as to what they

---

1. மாய னருள்கீதை மன்னு பொருடன்னைத
தூய பெரும்பூதூர்த் தொன்முனிதன்—மேய
தகையான் மணவாள மாமுனிவன் சொன்னான்
னொகையாரும் வெண்பாச் சுரந்து.

2. சொட்டை மணவாளத் தூய்முனிவன் சொற்செறிந்த
சட்ட மருவுந் தமிழ்ப்பாவாற்—கட்டெழில்சீர்க்
கோமா னருள்கீதை கூறும் பொருளுணர்வார்
சீமா னடிசேர்வர் சென்று.

were discussing, they ridiculed him for his ignorance by saying "Musala Kisalaya" which means a "pestle sprout." In his innocence he believed it to be the name of a real book and accordingly intimated his guru Periyavachan Pillai, who, after a hearty laugh over it, explained to him how he has been ridiculed. Immediately he set about in right earnest to learn the alphabets of both Tamil and Sanskrit literature with the result that he is now reputed to be the author of more than twenty works such as Pannirayirappadi, Tiruviruttam—Svapadesam and Anyapadesam (an excellent work in every way), Tatva Dipika etc. As a retort to the Pandits who ridiculed him he has actually composed a poem called " Musala Kisalaya ". That he became a great Tamil scholar is clear from the very rare grammatical forms and classical phrases which he has used in this book itself. His date is not certain, but he is believed to have lived soon after Sriman Vedanta Desika if not his actual contemporary.

This work consists of 723 stanzas on the whole, divided, according to the orthodox style, into three *Shatkas* of six chapters each. We have now pub-

lished the first *Shatka* and the second and third will follow in due course.

In fine, we have to thank Mr. Anbil S. Venkatachariar for his kindness in procuring for us this very rare and valuable Mss. and Messrs. Pandits S. Swaminatha Aiyar and P. R. Krishnamachariar, but for whose kind and patient plodding through the manuscript leaves and the proof sheets, such a correct and accurate edition would have been an impossibility. We are further indebted to these two learned Pandits for the valuable notes added at the end of the book.

SRIRANGAM,
*27th September 1906.*

*T. K. Balasubrahmanyam.*

ஸ்ரீ

# பகவத்கீதை வெண்பா.

## பாயிரம்.

கண்ணனீ பார்த்தற்குக் காத்தற் கினிதுரைத்த
திண்ணார் திறமருளுஞ் சீர்கீதை—யெண்ணரு
நன்பொருளை யெங்கட்கு நாதா வருளுதலாற்
புன்பொருளிற் போகா புலன்.

மாதவனு மாமாது மாறனும்பண் பூதூர்வாழ்
போதமுனி யுந்தந்தம் பொன்னடிகண்—மீதருள
வச்சிமேற் கொண்டே யுயர்கீதை மெய்ப்பொருளை
நச்சிமேற் கொண்டுரைப்பனான். 2

நாத னருள்புரியு நற்கீதை யின்படியை
வேதம் வகுத்த வியன்முனிவன்—பூதலத்துப்
பாரதத்தே காட்டும் பதினெட்டோத் தும்பகர்வன்
சீர்தழைத்த வெண்பாத தெரிந்து. 3

வேதப் பொருளை விசயற்குத் தேர்மீது
போதப் புகன்ற புகழ்மாயன்—கீதைப்
பொருள்விரித்த பூதூர்மன் பொன்னருளால் வந்த
தெருள்விரிப்ப னந்தமிழாற் றேர்ந்து. 4

தேயத்தோ ருய்யத திருமா லருள்கீதை
நேயத்தோ ரெண்ணெய் நிறைவித்துத்—தூய
தெருணூல தேபெரிய தீபத்தை நெஞ்சி
லிருணூற வேற்றுகேன் யான். 5

சுத்தியார் நெஞ்சிற்றந் தொல்கரும ஞானததா
லத்தியா தொன்றை யறந்துறந்தோர—பத்தியா
னண்ணும் பரமனு நாரணனே நற்கீதைக்
கெண்ணும் பொருளா மிசைந்து. 6

ஞானங் கரும நலஞ்சேர் நிலையதனை
யான மனயோகத் தாராய்ந்திங்—கூன மறத்
தன்னு ருயிருணருந் தன்மையினை நற்கீதை
முன்னுறேறுத் தோதும் முயன்று. 7

7001



உள்ள படியிறையை யுற்றெய்த முற்றறஞ்சேர்
தெள்ளறிவில் வந்து திகழ்பத்தி—வெள்ள
நடையாரும் யோகத்தை நாதனருள் கீதை
யிடையாறோக் தோது மெடுத்து. 8

கருமமறி வன்பிவற்றின் கண்ணார் தெளிவில்
வருஞ்சித் தசித்திறையோன் மாட்சி—யருமையற
வென்னாதன் றந்த வெழிற்கீதை வேதாந்தப்
பின்னாறோத தோதும் பெயர்ந்து. 9

தானமுடன் றீர்த்தந் தவம்புரித லைவேள்வி
யானமுத லாறு மறமிறைவற்—கேநயந்த
தன்மையாற் றன்னகத்தைச் சங்கமப யன்றுறத்தல்
கன்மயோ கத்தின் கணக்கு. 10

அற்ற முறைக்கி லதுகேண்மி னம்புயத்தாட்
கொற்றவனை நெஞ்சிற் குடியிருத்தி—மற்றொன்றை
யத்தியா தொனறு மவன்பா னலம்புனைதல்
பத்தியோ கத்தின் படி. 11

புலன்பொறியை நீக்கித்தன் புத்தியினிற் செம்மை
யலம்புரியார்க் குற்றவுயிர் மாட்சி—நலம்புனைந்து
மானயோ கத்திறையை மன்னுநிலை காண்பதே
ஞானயோ கத்தி னலம். 12

# பகவத்கீதை வெண்பா.

இந்த வகையமைந்த யோகங்க ளிம்மூன்றா
தந்த மிடையிற் றனித்தனிசே—ர்ந்தமிலா
வானந்த வின்பத் தணையநெறி யாகுமே
மானந் தருமியல்பால வாய்ந்து. 13



ஸ்ரீ

# பகவத்கீதை வெண்பா.

## அத்யாயம் 1.

## அர்ஜுனவிஷாதயோகம்.

*வேண்டிட்டத்தி லன்றி வெறுத்து நலமிரக்கம்*
*பூண்டவற்றைப் பொல்லாப் புலமென்று—மீண்டகன்ற*
*சுற்றமது நோக்கியே சோகித்த தேர்விசய*
*னுற்றமயல் சொல்லுமுத லோத்து.*

*தன்மநில மாகுங் குருநிலத்துத் தாஞ்சேர்ந்து*
*வன்மையம ரிச்சித்தென் மைந்தருந்தந்—தன்மையுறப்*
*பஞ்சவரு மென்செய்தா ரென்றந்தன் பண்புரைப்பச்*
*சஞ்சயனுஞ் சொன்னான் சமைந்து.* 1

பாண்டவர்க டங்கள் படைவகுத்த பாங்கதனைப்
பூண்டமிக நோக்கிப் பொருமையினற்—றாண்டபரித்
தேரார் துரோணன்பாற் சென்றடைந்து செப்பினன்
ருரார் துரியோ தனன். 2

பாரா ரியனேயிப் பாண்டவர்கள் சேனையினைத்
தாராரும் பாஞ்சாலன் றந்தமகன்—சீரார்
மதியுடைமை நீகொடுத்த வண்மையினற் காக்கும்
விதியுடைமை பூண்ட வியப்பு. 3

வென்றியமர் வில்லாளர் வீமன் விசயனென
நன்றியமர் தன்னு ணலம்புனைவோர்—நின்றிகல்வோன்
வெல்லும் விராடன் மிருதோான் பாஞ்சாலன்
சொல்லு மளவோ தொகை. 4

மற்றும் பலவரசர் மாரதராய் நிற்கின்ருர்
முற்று மபிமனுடன் முந்துற்றுப்—பற்றி
யமர்முயற்றி சேர்வ ரதுநிற்க கேளாய்
நமர்முயற்றி தன்னை நயந்து. 5

பின்னுநூல் வேதியனே வெற்றியரை யானுரைக்கேன்
முன்னுநீ பாட்டன் முயல்கன்னன்—முன்னங்
கிருபனச்வத் தாமா விகன்னனுடன் கேளிர்
நிருபர் பலரு நிறைந்து. 6

MAHAMAHOPADHYAYA
U. V. SWAMINATHAIYAR LIBRARY
TIRUVANMIYUR, MADRAS-41

வேறும் பலசூரர் மெய்யே யெனக்காக
வூறு படவுடல முள்ளுயிர்விட்—டேறு
நிலையுடைய பல்படையார் நின்றமரு ளென்று
மலையுமவ ரெல்லாரும் வந்து. 7

நங்கள்படை பாட்ட னயந்தினிது காக்கவே
யிங்கமைவு போதா திராசிற்கு—மங்கவர்தம்
வீமன் மிகக்காக்கும் வென்றிப் படையமைந்து
சேம முறுதிபெறுஞ் சேர்ந்து. 8

வேகப் படைநடப்பி லெல்லாம் வியந்துமது
பாகத்தை நீங்காது பாட்டனையே—யேகமா
யாங்கமர்ந்து சூழ்ந்தே யமர்முகத்து நோக்குங்கோள்
பாஙகறிந்து நீங்கள் பலர். 9

இவ்வா றியம்பு மிகலரச னுண்மகிழ்ந்து
தெவ்வார் குருமுதலாஞ் சீர்பாட்ட—னெவ்வாறுஞ்
சிங்க வரவஞ் செலுத்தினன் வீமெனற்
சங்கு முழங்குவித்தான் றான். 10

பின்னும் பலசங்கம் பேரி பெருமுரசு
துன்னும் பணவமுதற் றொல்லியங்கள்—பன்னி
யறைந்தெழுந்த வந்தவொலி மேலாகு மாழி
நிறைந்தெழுந்த பேரொலிபோ னின்று. 11

ஆங்கதற்பின் வெள்ளைப் புரவியணி தேரின்மேற்
பாங்கமரு மாதவனும் பாண்டவனு—மோங்கரவச
சங்கமலர்க் கைகளினாற் றம்முகம்வைத் தூதினா
ரங்கமலத் தன்னமது வாம். 12

பன்னியசீர்ப் பாஞ்ச சனியப் பணவத்தை
முன்னிருடீ கேசன் முழக்கினான்—மன்னியபூந்
தாரார் தனஞ்சயனுந் தன்றேவ தத்தமெனுஞ்
சீரார்சங் கூதினான் சேர்ந்து. 13

பாடார் பவுண்டிரமாம் பாரப் பணிலத்தை
யோடா விறல்வீம னூதினான்—சேடார்ந்த
வந்தருமன் மைந்த னனந்த விசயமெனு
நந்தரவஞ் செய்தா னயந்து. 14

துங்கப் பரிநகுலன் றொல்சீர்ச் சுகோடமெனுஞ்
சங்கத் தரவந் தனைவிளைத்தான்—றுங்கமலர்
மிக்கமணிப் புட்பகத்தை வென்றிச சகதேவ
னெக்கவெடுத் தூதினா னுற்று. 15

வில்லாண்மைக் காசிமனும் வென்றிச் சிகண்டியுடன்
மல்லார்பாஞ் சாலனவன் மைந்தனுமற்—றெல்லாருஞ்
சாத்திகியுஞ் சௌபத் திரனுந் தனித்தனியே
வாய்த்ததஞ்சங் கூதினார் மற்று. 16

அக்கடிய பேரரவ மந்தன் சுதரிதயஞ்
சிக்கெனத் தீரச் சிதைத்ததே—தொக்கெழுந்து
வான்றிசையு மண்ணகமு மற்றும் பலவிடமுந்
தான்றிகழ வோங்கித் தழைத்து. 17

போர்முகத்தில் வந்துன் புதல்வர் தமைநோக்கிக்
கார்முகத்தை வாங்கிக் கவித்துவசன்—பார்முகத்து
நின்றா ரிருபடைக்கு ணீநிறுத்தென் தேர்கண்ணோ
வென்றாங் குரைத்தா னிது. 18

பொல்லாத வந்தன் புதல்வனுக்குப் போர்முயல
வெல்லாரும் வந்திங் கெதிர்நின்றே—வில்லாண்மை
யேவருடன் காட்டுவதென் றேவும் படைமுனையில்
யாவரையுங் காண்பனினி யான். 19

என்று விசய னிசைப்ப வெழிற்கண்ணன்
சென்றங் கிருபடையுட் டேர்நிறுத்தி—நின்றணியும்
பாட்டன் றுரோணன்முன் பார்த்தனே பல்குருக்க
ளீட்டம்பா ரென்றா னெடுத்து. 20

பந்தமுற வாங்கவனும் பார்த்தான் படையிரண்டிற்
றந்தையர்கள் பாட்டர்தாந் தாழ்குருக்கள்—மைந்த
ருடன்பிறந்தார் பேர ருயர்மாமர் தோழர்
மடந்தையருண் மாமடிகண் மற்று. 21

மேவலராய் நின்றெதிர்ந்த மிக்கபெருஞ் சுற்றமாங்
காயலரை நோக்கிக் கவுந்தேய—ஞேயதஞன்
மிக்கமனம் பேரிரக்க மேவிப் பிரான்முன்றான்
றக்கவுரை செய்தான் றளர்ந்து. 22

நன்றி புனையு நமரெல்லா நாளமருட்
டன்றி வரக்கண்டு கண்ணனே—குன்றி
முகஞ்சுவறி மெய்ந்நடுங்கி முற்றுந் தளர்ந்தென்
னகங்குழைய ரோமாஞ்ச மாம். 23

கைந்நின்றுங் காண்டீவம் வீழுங் கனன்றுடறோன்
மெய்ந்நின்று தாங்கமிக மாட்டேன்—மைந்நின்ற
நெஞ்சந் திகைக்கு நிமித்தங் களுந்தீதா
வஞ்சும் படியா மவை. 24

தன்றமரைக் கொன்று சமரத்துத் தான்சேரு
நன்றி தனையொன்று நான்காணேன்—கொன்ற
விசையமுநான் கண்ணனே வேண்டே னரசு
மசைவில் வருஞ்சுகமு மாங்கு. 25

இந்த வுயிரரசு போகங்க ளாலெமக்கென்
னந்தவையை யாவர்க்கா வத்தித்தோ—நந்தமரா
மங்கவர்க ளெல்லா மமர்த்தலையி லேநின்றார்
தங்களுயிர் வித்தந் தவிர்ந்து. 26

தந்தை குருபாட்டர் தம்மாமர் மாமடிகண்
மைந்த ரவர்மைந்தர் மற்றுள்ள—பந்தத்
தியன்ற விவர்தம்மை யான்கொல்ல வெண்ணேன்
முயன்று கொலினுமெனை மொய்த்து. 27

மூவுலகும் பேறெனினு முன்னேன் கொலையதனிற்
பாவுதரைக் காகப் பகைப்பனோ—மேவுசினத்
தந்தன் புதல்வர்களை யாங்கமருட் கொன்றெங்கட்
கெந்தவுகப் புண்டா மினி. 28

பாவிகளா மற்றிவரைக் கொன்றாலும் பாவமே
மேவுமெமை யாதலினிம் மேவலரைச்—சாவநினைந்
தேதமுயல் கிற்கிலோ மென்சுற்றங் கொன்றிங்கே
மாதவனே யாம்சுகிப்போம் வந்து. 29

கோதில் குலஞ்செற்ற குற்றங் குலக்கேடுக்
காதி வரும்பாவங் காணாத—வேதிலர்க
ளீங்கிவர்க ளேலு மிஃதறிந்த யாந்தவிர்த
லாங்கிசைசை யான வமைவு. 30

குலங்குறையின் மாளுங் குலத்தறங்கண் மீது
விலங்கு நெறியமுக்கி மேலா—நலங்குலைந்து
மாதர் நெறியழிவர் வண்ணங் கெடுமெதுவே
போத நரகப் புணர்ப்பு. 31

மீது மயர்பிதுக்கள் வீழ்வர் மிகுபழியாற்
சாதி குலதன்மந் தானழியு—மாதலினு
னீங்கா நிரயத்து நிற்பவ ரென்றுரைக்கும்
பாங்கார் சுருதிப் பயன். 32

ஐயோ பெரும்பாவத் தாங்கமைந்தோ மாதலினுன்
மெய்யோருஞ் சுற்றத்தை வீழ்த்துதலால்-வையோவாச்
சத்திரத்தால் வீண்கையெனைத் தாந்தடிவ ரேன்மாற்று
ரத்திரத்தா லஃதே கடன். 33

இவ்வாறு சொல்லி யிகல்விசய னம்புடனே
தெவ்வார் சிலைபொகட்டுச் சிந்தைதளர்ந்—தவ்வாறு
நின்றதேர் மீது நிலைகுலைந்து தானிருந்தான்
துன்றுசோ கத்தாற் றிகைத்து. 34

இப்படியார் பார்த்த னெழுந்தபெருஞ் சோகததாற்
றப்படியாந் தன்மையினைச் சார்ந்ததனை—மைப்படியா
மாயனருள் கீதை மன்னுமுத லோத்துரைக்கு
மேய பொருண்முடிந்த திங்கு.

# அத்யாயம் 2.

## ஸாங்க்யயோகம்.

மேலிரவைடா மோததால் விசயன் வெறுப்பாகறறக
கோலி யுயிருடலின் கூறறிவைகள்—காலியுடன்
போமாயன் மன்னுயிகள் பொன்றுமை முன்னகமா
மாமாயன் சொன்னன் மகிழ்ந்து.

தண்கொ ளருளாலே சூழ்வுற்ற தார்விசயன்
கண்க ளழுநீர்க் கலுழியெழ—வெண்குலைந்த
வண்ணங்கண் டாங்கே மதுசூ தனனவன்ற
னெண்ணங்கொண் டுரைத்தா னென்று. 1

எத்தாலே யுன்னைத் தசாவிடத்தே யிக்கலக்கஞ்
சத்தானர் சாராது சார்ந்ததுதா—னித்தாலே
மேலுலக மில்லை மிகுபழியாம் பார்த்தனே
யேலுமதன் றேகா ணிது. 2

இந்த வலித்தனத்தை யெய்தாதே யீதுன்பால்
வந்தணைவ தல்லகாண் மன்னவனே—குந்தி
சிறுவனே நெஞ்சிளைப்பாஞ் சிற்றியல்பை நீங்கி
யுறுவதே கொண்டெழுநீ யுற்று. 3

அவ்வளவி லந்த வருச்சுனனு மண்ணலைப்பார்த்
தெய்வகையாம் பாட்ட னெழிற்குருவா—மிவ்வவரைப்
பூசிப்ப தன்றிப் பொருவதேதம் பாலென்று
யாசிப் படவுரைத்தான் மற்று. 4

தொழப்படுமே லோரைத் தொலையா துலகி
லெழப்படுத னன்றே யிரப்பில்—விழப்படுத்தி
வாய்ந்தபொருள் காமித்த மற்றவரை யக்குருதி
தோய்ந்ததுவோ போகத்தின் றுய்ப்பு. 5

எதறியோஞ் சீரிதென யாம்வெல் லவுமாகு
மீதவர்கள் வெல்லவுமாம் வேறில்லை—பூதலத்தில்
யாவரைநாங் கொன்று விராதே முடிகின்றோ
மாவரிவர் போர்முன் னமர்ந்த. 6

கார்ப்பண்யத் தாற்கலங்கிக் கண்ணுற்று தருமமனத்த
ஓர்ப்பதிலேன் கேட்கின்றே னுன்னையான்—றற்பரிய
தேதிறலாஞ் சொல்லநீ யானுன் னடியனெனைச்
சாதியுனைத் தாழ்ந்தேனைச் சார்ந்து. 7

சாலவெதி ரற்றித் தலத்தரசில் வீற்றிருப்பு
மேலமரர் நாயகமு மேவிடினு—ஞாலத்தென்
றொல்லைப் புலனுலர்த்துஞ் சோகத்தைப்போக்குவதோ
ரெல்லைப் பொருள்காணேன் யான். 8

மைவண்ண மாயவனை மன்னன் குடாகேச !
னிவ்வண்ணம் வார்த்தை யியம்பியே—தெய்வண்ணக்
கோலேலன்யான் போரென்று கோவிந் தனையுரைத்து
மேலேதுஞ் செய்யான் வெறுத்து. 9

முன்ன மவனை முறுவலிப்பான் போன்மாயன்
மன்ன னிருபடையில் மத்தியத்தே—யின்னோதன்
சிந்தை யழிந்தோனைத் தெளிவித்தல் காரணமா
விந்தமொழி சொன்னா னெடுத்து. 10

சோகிக்க லாதவற்றைச் சோகித்தாய் தொல்லறிவி
லாகப் படிபகர்வ தாகின்றா—யோகத்தான்
மாயு முயிர்களையு மாயா வுயிர்களையு
மாயுமவர் சோகியா ராங்கு. 11

இறையா கியநானு மிவ்வுயிரா நீயு
முறையா லரசரிவர் முற்று—மறையாலே
முன்னாளு மின்மையிலை முற்றுமிதன் மேலாகு
மென்னாளு மின்மையிலம் யாம். 12 -35

இந்தவுயிர் கௌமாரம் யௌவனமூப் பென்பவற்றை
வந்தவுட லின்று மருவுதல்போ—லந்தவுயிர்
வேறுடல மேவுதலு மிக்கன்ன தாங்கதனைத்
தேறுமவர் தாங்கலங்கார் தீர்ந்து. 13

தன்மாத் திரைதீண்டுந் தன்மையவை சீதமழ
லென்மாச் சுகதுக்க மெய்துவிக்கும்—புன்மாயம்
வந்தியன்று போமதனான் மற்றவற்றை யெய்தலுறுந்
குந்திசுதா நீபொறுத்துக் கொள். 14

ஒத்த சுகதுக்க னுயர்தீர னென்னனை
யித்தகைய தன்மையிவை யீடழியா—முத்தனென
வாங்கவன்றா னாகுமே யாணேறும் பார்த்தனே
யோங்கமுதத் தன்மைக் குறுப்பு. 15

நில்லா வுடலகத்து நிற்குமுயிர் சத்ததனு
லில்லா ததுக்குண்மை யில்லையுண்மைக்—கில்லாத
தென்றிரண்டி னீறுங்கண் டேய்ந்தவத் தத்துவத்தை
நின்றென்றுங் காண்பார் நிகழ்ந்து. 16

யாதினா லிந்த வசித்தெங்கும் யாப்புற்ற
தாதிதனை மாயாதென் றுங்குணர்வாய்—மீதுதனக்
கூன மிலாதா லிதற்கொருவ னாசத்தை
யான மியற்றுவா னல். 17

மாயா தளவின்றி மன்னுஞ் சரீரிதனக்
கோயாது மாறு முடலமிவை—மீயாரு
மந்த முடையவெனு மாதலினாற் பார்த்தனே
யிந்த வமர்முயல்வா யின்று. 18

யாவ னிவனை யிவன்கொல்வா னென்றறியும்
யாவனிவன் கொல்லுண்பா னென்றறியும்—மேவு
மறிவிருவ ருஞ்சாரா ராங்கிவனுங் கொல்லா
னறியவனுங் கொல்லுண்ணா னோர்ந்து. 19

என்றும் பிறவா னிவனிறவான முன்புளனாய்ச்
சென்று பிறந்திலனுஞ் செய்திபில—னின்றென்றுந்
தொல்லையவ னவிவன் றேன்றுமுடல்கொன்றாலுங்
கொல்லரிய னாகுங் குறித்து. 20

உண்டாய்ப் பிறந்துவளர்ந் தோங்கிக் குறைந்திறத்தல்
கொண்டோ டம்பியல்லைக் கூடானைக்—கண்டா
னவனைத்தான் கொல்லுவிக்க வேல்வான்மற் றெங்ஙு
னெவனைத்தான் கொல்வா னியன்று. 21

ீழும் பழம்புடைவை பேணாது விட்டொருவன்
வேறு புதுப்புடைவை மேவுதல்போ—லீறிலவன்
மூத்துடம்பை விட்டு முதிராது வேறுவரும்
புத்துடம்பைச் சேரும் புகுந்து. 22

ஆயுதங்க ளாங்கிவனைச் சேதியா வன்னலை
தீயு மவனைத் தெகியாது—பாயுஞ்
சலத்தாறு மற்றவனைத் தான்கரைக்க மாட்டா
துலர்த்தாது மாருதமு முற்று. 23

அவ்வவற்று லேது மழியா னிவனென்று
மெவ்விடத்துந் தாணுவா யெய்ந்தசைவற்—றிவ்வகையெ[ன்
றுதுந் தெரியா னறிவறியா னென்றறிந்து
யாதுந் துயரேனீ யிங்கு. 24

இத்தன்மை யன்றியிவ னென்றும் பிறந்திறக்கு
மத்தன்மை யாக வறிதியோ—சித்தந்
தளரும் படியிங்ஙன் றுன்வெறுக்க வேண்டா
வளருந் திரடோளாய் மற்று. 25

பிறந்தவனுக் காங்கிறத்தல் பின்னறுதி யவ்வா
றிறந்தவனுக் கும்பிறப்பு மெய்துந்—திறந்தன்றே
லொன்றும் பரிகார மில்லா வொருபொருட்கு
நின்று மனந்தளரே னீ. 26

பூதங்க ளான புணர்ச்சி முதல்விளங்கா
சாதனங்க ளானவிடை தான்விளங்கு—மீதங்குப்
பொன்றுநிலைதான்விளங்காபோக்காமதில்வெறுப்பெ
னின்றதனைக் கேளின்ன னீ. 27

வியப்புளனைக் காணு மிவனை யொருவன்
வியப்புளனைக் கூறு மொருவன்—வியப்புளனாய்
மற்றொருவன் கேட்குமிம் மன்னுயிரைக் கேட்குந்தா
னுற்றுணர்க லானொருவ னோர்ந்து. 28

நின்ற வுயிர்வதத்தை நேரா துடலெதிலு
மென்றதனி லெவற்கு மிடரெய்தே—லுன்றருமம்
பார்த்துந் தளர்வுறாய் பார்த்திபர்க்குத் தன்மப்போர்க்
கேற்குந் தகைமையதொன் றில். 29

தானே வருமிந்தத் தன்ம சமரத்தை
வானேறும் வாயி லெனமதித்துத்—தேனேருந்
தார்மன்னர் பார்த்தனே தாங்கள் சுகமுடனே
சீர்மன்ன வேறுவர்காண் சென்று. 30

நீயித் தரும சமரத்தை நின்றியலா
யாயிற் புகழுன் னறம்விட்டுப்—போயிற்றால்
பாவந் தனையடைதி பாரெல்லா நின்றிசைக்கு
மேவந் தனையே யெழுந்து. 31

கொண்டாட்டுற் றார்க்குக் கொடிதுபழி சாமதனிற்
கண்டார்க ளச்சத்தாற் காதமரிற்—றிண்டாடி
மீண்டா யெனநினைப்பர் மேலாம் வியப்புறீ
வேண்டாத நோய்மையுறேன் மிக்கு. 32

ஒன்னாதா ருன்னாண்மை யொன்றன் றெனப்பழித்துச
சொன்னாடாப் பல்பழியைச் சொல்லுவார்—எந்நாளு
மாங்கதனின் மிக்க வருந்துன்பந் தானுண்டோ
வோங்கினிதாந் தோளா யுரை. 33

இன்றிகலிற் பொன்றினீ யிந்திரலோ கப்பெறுதி
வென்றியுறி லாளுதியிம் மேதினியை—யென்றிதனை
யோர்ந்ததனாற் கௌந்தேயா வுற்றெழுநீ வெஞ்சமத்துத்
தீர்ந்தமனத் தோடுந் தெளிந்து. 34

இன்பந்துன் பம்பே றிழவு சயாசயங்க
ளுன்பந்தத் தொக்க வுணர்வெய்தி—வன்பந்தத்
தெவ்வகையார் வெஞ்சமத்தைச் சேர்வுறுநீ பாவத்தை
யிவ்வகையான் மேலணையா யிங்கு. 35

சாங்கியத்தின் தன்மையின்மேற் புந்தித் தகவுரைத்தே
னீங்குகன்ம யோகத் தியல்பிலிதன்—பாங்கியம்பக்
கேளாயிப் புத்தியினைக் கிட்டவினைக் கட்டினைநீ
மூளாம னிற்றி முயன்று. 36

செய்தவறங் குன்றாது சேரா தவஞ்சிறிது
மெய்தருமங் காக்கு மிகுபயத்திற்—பொய்தவிரும்
புத்திதீர் வொன்றாகும் புன்மைப் பலநினைவா
மத்திரந்தீர் வில்லா தவர்க்கு. 37

புன்பயனுற் பூத்தவுரை போதப் புகல்வாறி
வென்பதனை யில்லா ரெழின்மறையி—னன்பகருஞ்
சொற்பயனே பற்றியதிற் றொல்பொருண்மற் றில்லென்
பார், கற்பதனைக் காணுதார் கண். 38

காமத்தை யுன்னிக் கணிசித்து மேலுலகைச்
சேமத்தை யிட்டுச் செனித்தழலு—மீமத்
தியற்றிதரும் போகத்தி லின்பத்தை நோக்கி
முயற்றியுடனேயெழுவர் மூண்டு. 39

போகமிகு செல்வத்துப் பூண்டதன் னெஞ்சழிந்தார்க்
கேக வகையுற்ற வெழிற்புந்தி—யோக
மமைவுரு துள்ளத்தி லாதலால் வேதச்
சமைவுதான் கேளாய் தரித்து. 40

முக்குணத்தோர் பண்புரைக்கு மூண்டுமறை நீமன்னு
வக்குணத்து மன்னே லவாநெஞ்சா—யிக்குணத்தாற்
சாருதுய ரற்றென்றுஞ் சத்துவத்தி னப்புறத்தி
லாருமியோ கக்கேம மற்று. 41

எங்கு நிறைநீ ரெழிற்றடத்து யாவர்க்கு
மிங்கு மருவுபய னெவ்வளவா—மங்கனைத்து
வேதத்து மந்தணற்கு வேண்டுபய னவ்வளவாம்
போதத்துக் கீடாப் புணர்ந்து 42

கருமத்தே யுன்றனதிகாரங் கண்டாய்
வருமப் பயனிலனு மன்று—தொருமித்த
மற்றதனுக் கேதுவா மன்னேல் கருமமலா
வெற்றமைவில் வேண்டா விருப்பு. 43

பேறிழவி லொத்தமைத்துப் பேணு நசைதுறந்து
தேறிவரும் யோகத்துச் சேர்ந்துநீ—யாறியமைந்
தித்தகைவி லாங்கரும மேந்தியநீ யோகந்தா
னொத்த லெனவுரைப்ப ரோர்ந்து. 44

தக்கமரும் புத்தியோ கத்திற் றனஞ்சயனே
யக்கருமந் தூர வவரங்கா—ணக்கவரும்
புத்திக்கே நிற்கும் புகல்விருப்புப் புல்லியர்கா
ணத்தித்தே செய்யு மவர். 45

இந்நிலையிற் புத்தியுட னேய்ந்தா ரிருமைவினை
தந்நிலையை யிங்கே தவிர்வர்கா—ணன்னிலையான்
மெய்கருதி யோகத்து மேவுதிநீ யோகந்தாண்
செய்கருமத் தாகுஞ் சிறப்பு. 46

தீர்ந்த மனத்துத் தெளிவுற்றார் செய்கருமத்
தார்ந்த பயனை யறத்துறந்து—சேர்ந்த
பிறப்பணையுங் கட்டவிழ்ந்து பெய்துயர்நோய் தீர்ந்த
சிறப்பணைவர் நன்மையினைச் சேர்ந்து. 47

எவ்வளவி னின்மோகத் திற்கலக்க மாமிதனை
யிவ்வகையே புந்தி யெழக்கடக்கு—மவ்வளவிற்
கேத மருவுதிநீ கேட்பதிலுங் கேட்டதிலு
மேத மிகும்பயனா மென்று. 48

ஓதுமென் பாற்கேள்வி யுற்றமைந்த புந்தியுயிர்
நீதுசமா திக்கண் மிகச்சலியாப்—போதினீ
வந்தியோ கத்துணர்வை மன்னுறுதி யாங்கதுகாண்
புந்தியோ கத்தின் புணர்ப்பு. 49

என்று திருமா லியம்பு நிலைகேட்ட
வென்றி விசயன் மிகவிரும்பி—நின்ற
வறிவுடையான் மாற்ற மவனிலைமை பேற்றின்
பிறிவுறையா யென்றுரைத்தான் பின். 50

ஆங்கவனுக் கண்ண லதுவுரைத்தா னாங்குயிரின்
பாங்கதனாற் றூனே படிந்தமைந்து—தாங்கரிய
வெண்ணரிய காமங்க ளெல்லாந் துறக்குமவன்
றிண்ணறிவ னாகுமெனச் செப்பு. 51

துன்பத்தி லென்றுந் துளங்கா மனத்தனா
மின்பத் திடையாசை யில்லவனாய்ப்—புன்பற்றி
லன்பு பயம்வெகுளி யற்றவனே யாங்குணர்வின்
வன்பு பெறுமுனியா மற்று. 52

எங்கு மருவுநசை யேது மறத்துறந்து
தங்கு நலந்தீங்கு தானணோந்தே—யங்கங்கு
மூந்து முகப்பு முதிர்வெறுப்பு மற்றூர்க்கு
வந்து நிலையா மதி. 53

அங்கஙக ளாமை யகத்தடக்கு மாறுபோ
லிங்கைம் பொறிக ளியல்பனைத்தும்—பொங்கைம்
புலனின் றகத்தடக்கும் போதத் தனக்கு
வலனின்ற வேற்குமே வந்து. 54

துய்யாது தான்றுறந்தான் றுய்த்தபொருள் விட்டாலு
மெய்யாருஞ் சஙகம் விடாதிருக்கும்—பெய்யவே
சென்று பரமாகுஞ் சீருயிரைக் கண்டக்கா
னின்றதுவு நீங்கு நெகிழ்ந்து. 55

முயன்றிடினுந் தன்புலன்கண் மொய்ம்பான் மனத்தை
யியன்று நிலைதொலைக்கு மென்பா—னயந்தே
யவையென்றுங் காக்கி லவன்கண் வசமா
நவையின்று நிற்குமதி நன்கு. 56

புன்பொருளை யுள்ளும் புமானுக் கதிற்சங்கம்
பின்பதனற் காமமதிற் பின்வெகுளி—யன்பதனன்
மோகமதிற் பொன்று மிருதியதிற் புத்தியழி
வாகுமதிற் றூனசிக்கு மாங்கு. 57

உகப்புவெறுப் பற்றுத்தன் னுள்ளாற் பொருள்க
ளகத்துவச மாம்புலனு லார்ந்தோன்—மிகத்தெளிவு
சேரு மதிற்றுயருந் தீருந் தெளிநெஞ்சி
லாரு நிலைப்புந்தி யாசு. 58

யோகமென் பக்க லிலானுக்குப் புந்தியில்லை
யேக நினைவவனுக் கில்லையுமாம்—போகத்திற்
சாந்தியவ னுக்கில்லை சாந்தியில னுக்கெத்தா
லேந்திவரு மின்பந்தா னீங்கு. 59

ஏயுமனந் தோய்புலனி லேதுடனு மாதுணர்வை
வாயுமரத் தோணியென மாய்க்குமால்—தோயும்
பொருளிடத்து நின்று புலன்மீட்க வாங்கே
தெருளுறைப்புச சேருஞ் சிறந்து. 60

யாது வுலகர்க் கிருளிரவா மாங்குணர்ந்து
போத மருவும் புலன்வென்றோ—னேதி
லுணர்வுறுவ ரீங்கியர்க ளூற்றுணர்ந்த யோகிக்
கிணரில்லா தாகு மிருண்டு. 61

நிறைந்து நிலைசலியா நீள்கடல்வாய் நீர்யா
றுறைந்த வகையதுபோ லுள்ளே—மறைந்தெவன்பால்
காமங்க ளெல்லாங் கரக்குமவன் சாந்திபெறு
மேமம் பெறான்காமி யிங்கு. 62

காம மவையனைத்துங் கைவிட் டவணைசையற்
றேமமுற யானெனதென் றிவ்விரண்டி—னும
மறந்துறந்து நின்றா னவன்கண்டாய் சாந்தி
பெறப்பயின்று நின்றான் பெரிது. 63

இதுகாண் பிரமமெனு மிவ்வுயிரின் றன்மை
யிதுகாண் பெறின்மயக்க மெய்தா—னிதுதன்னி
னந்தகா லத்தமர்ந் தப்பிரமா னந்தமெனுஞ்
சந்தமாந் தன்மை பெறும். 64

ஆய னருள்கீதை யாய்ந்தவிரண் டாமோததின்
மேய வுயிர்நிலைமை மெய்ம்முடிவு—தூய்மனதத
ரன்றதுணி வற்ற லமைந்தா ரமர்பொருள்க
ளென்றவகை தான்முடிநத திங்கு.

அத்யாயம் 3.

# கர்மயோகம்.

மூன்றுமோத் தாகுமிது முன்னுரைத்த புந்தியினுக்
கேன்று வதுகரும மென்பதனை—லான்றமைந்து
தன்கருமஞ் செய்யுமதே தக்கதென மிக்குரைக்கும்
வன்கருமந் தீரும் வகை.

நாதா கருமத்தி னன்றாகிற் புத்தியினை
யேதாக விக்கருமத் தேவுதி-சூதார்ந்த [னன்றியெனத்
வுன்னுரையென் னுண்மயக்கு மொன்றுரையென்
தன்னுரைசெய் தான்விசயன் றான். 1

அண்ணலவன் கேட்க வதனியல்க ளங்குரைத்தா
னெண்ணமருஞ் சாங்கியருக் கின்னறிவு-வண்ணநிகழ்
சீருடைய யோகியர்க்குச் செய்கரும மென்றிரண்டும்
பேருலகிற் சொன்னேன் பிரித்து. 2

இட்டத்தாற் கன்மத் திழியார் வினையொழியார்
விட்டத்தாற் பேறதனை மேலடையார்-தொட்டொன்
செய்யாரிறைப்பொழுதுநில்லார்செறிந்தியல்வர் [றைச
மெய்யார் குணத்தெவரு மிக்கு. 3

கருமக் கரணங்கள் கட்டித்தன் னெஞ்சில்
வருமப் பொருணினைந்து மன்னிப்—பெருமைவினைக்
கைம்மையினாற் பாவிக்குங் கள்ளக் கருத்துடையான்
பொய்ம்மையினு னென்றே புகல். 4

நெஞ்சாற் புலனடக்கி நேர்கரும யோகத்தை
யெஞ்சா துழல்கரும விந்தியத்தாற்—றுஞ்சாது
தான்றொடங்கினன் றியலுந்தன்மையுடன்றொத்தற்றன்
வான்றொடர்ந்த வண்புகழான் மற்று. 5

நின்றுநீ செய்யு நியதக் கருமத்தை
யென்றுமிது மற்றறிவி லேற்றமுடைத்—தன்ற
னுடனடப்பு மோடா தொருகரும மற்று
லடலடர்த்த தோளா யறி. 6

ஐவகைய வேள்வியினுக் காகாக் கருமங்கண்
மெய்வகையே கட்டு மிகவுலகை—யிவ்வகையா
யாங்கதனுக் காக வமைந்துன் னவாசையைவிடுத்
தீங்கிதனை நின்றே யியற்று. 7

வேள்வியுடன் மானிடரை வேதாப் படைத்துமுனங்
கேள்வி யவர்க்குரைத்தான் கேண்மையுட—னூழ்வி
மித்தாலே துய்ப்பய னுற்றிடுமி னுங்களுக்கிங் [னையா
கெத்தாலு மின்பளிக்கு மீது. 8

இவ்வேள்வி யானீ ரிறைஞ்சிடுமின் வானோரை
யவ்வேள்வி யாலவரு மாக்கத்தா—லெவ்வாறு
மும்மை யளிப்ப ரொருவர்க் கொருவர்நீ
ரிம்மை மறுமையுறு மிங்கு. 9

அன்னபெரு வேள்வியா லாங்கிறைஞ்சப் பட்டமரர்
மன்ன பெரியவள மற்றளிப்ப—ரின்னே
யவர்தந்த போக மவர்க்களியா துண்பான்
கவர்கின்றான் கள்வனே காண். 10

வேள்வியினின் மிக்கதனை யுண்பார் விடப்படுவ
ரூழ்வினைக ளின்றொடர்ச்சி யுண்ணின்றங—கேள்வியி
ன்னுடம்புக் காகச் சமைத்துண்பார் பாவத்தை[லாத்
முன்னுடனே யுண்பார் முயன்று. 11

அன்னத்தாற் பூதங்க ளுண்டாகு மன்னந்தான்
மின்னத்தாழ் மாரியான் மிக்கியலு—மன்னத்தான்
மாரியது வேள்வியால் வந்தியலு மவ்வேள்வி
காரியம தாலாகுங் காண். 12

இக்கருமங் காய மெனச்சேர் பிரமத்தர்
மக்கருமஞ் சீவனு லாங்கதுவாஞ்—சிக்கெனவே
யெங்கு நிகழ்வுடலா மிப்பிரமம் வேள்வியிலே
தங்கு நிலையமருந் தான். 13

இப்படியே யீங்கமைந்த சக்கிரத்தை யேவன்றன்
மெய்ப்படியே தான்சென்று மேவலுறா—னெப்படியும்
பாவியுயி ராகிப் பழுதே படர்பொறிப்பட்
டாவி சுமப்பா னவன். 14

தன்விரும்பித் தன்னுகர்ந்து தன்னமைந்த ஞானிக்குப்
பின்விரும்பிச் செய்கருமம பெற்றில்லை—முன்விரும்பிச்
செய்தத்தா லொன்றில்லை செய்யாத்த தாலில்லை
வையத்தா னும்பயனின் மற்று. 15

ஆதலினாற் பற்றற் றமரியற்பாய் நின்கரும
நீதகவு தன்னுடனே நின்றியல்வாய்—மீததனைப்
பற்றற் றியன்றாற் பரமா முயிரினையே
பெற்றத்தை நின்றுய்யும் பின். 16

முன்னஞ் சனகாதி யோகியரு மூண்டியன்ற
வன்ன கருமத்தா லானபயன்—மன்னினர்கா
ணீந்த வுலக மிசைவகையும் பார்த்தியலா
யந்த வுயர்கரும மாய்ந்து. 17

MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY
TIRUVANMIYUR, MADRAS-41



மேலொருவன் செய்த மிகுகருமந் தானெது வென்
றேலுமதின் மற்றிங் கியல்சன முஞ்—சாலவவன்
யாதைத்தன் னங்க மெனவியலு மிவ்வுலக
மாதைப்பின் செல்லு மமர்ந்து. 18

மூவுலகுந் தன்னுள்ளு முன்பெய்த தாய்ப்பின்பு
மேவுமியல் பாலெய்த வேண்டுவதொன் —றுவதெனக்
கில்லையா யேயிருக்க வெல்லாக் கருமத்து
மொல்லையா னின்றியல்வ னோர்ந்து. 19

யானியலா திங்கொழியி லென்வழியைப் பின்செல்வர்
மானிடர்மற் றிவ்வுலக மாயுமாற்—றுணிலைசேர்
நன்மரபு தான்கலக்கி நானே யிவர்தம்மைப்
புன்மையினி லுய்த்தேனாய்ப் போம். 20

நசையுடையார் செய்கைபோன் ஞானி நசையின்றி
யிசையுலகுக் காக வியல்வான்—பசைகருமத்
தானவறி வில்லார்க் கதிநெஞ்சைப் பேதியேற்
றுணிசைவு செய்கவதிற் சார்ந்து. 21

மெய்க்கருமந் தன்குணத்தான் மேவிவரும் வேறறியா
னிக்கருமம் யான்செய்தே னென்றிருக்கு—மக்கருமத்
தேயகுணம் வேறறிவா னிக்குணங்க டன்னிற்று
னையவென வுன்னுநசை யற்று. 22

முக்குணத்தான் மூடரா மாந்தர் முயல்கரும
மக்குணத்து நாளு மமர்வுறுவர்—மிக்க
வறிவுடையா ரல்லாரை யாங்கசைவு செய்யார்
செறிவுடைய ஞானத்தன் சேர்ந்து. 23

என்னிடையே யிக்கரும மெல்லா மினிதிருத்தி
நின்னிடையின் மிக்கமர்ந்து நெஞ்சினன்—மன்னியபே
ராசையுட னீமமதை யற்றநீ கமர்முயல்வா
யாசையுட னுள்வெதுப்பற் றூர்ந்து. 24

எவர் விருப்போ டிழவின்றி யென்மதத்தை
மேவி முயல்வார் விடப்படுவோர்—பாவத்தா
லாங்கவர்க ளல்லா ரறிவழிந்து மூடராய்த்
தீங்கமர்வ ரென்றே தெரி. 25

தன்னியல்வுக் கீடாகத் தானியலும் பேரறிவ
மன்னியவ னுண்மையு மற்றெவையு—மந்நிலையே
தன்செய்தி யாகுதலாற் றன்விலக்க நூலுரைப்ப
தென்செய்வ தாக விசைந்து. 26

உற்றபொரு டோறு முகப்பு வெறுப்பவைதாம்
பெற்ற நிலையினவாம் பேசுங்கால்—மற்றவற்றை
யாங்கணைவா னல்ல னவையிவனுக் கெவ்வாறுந்
தீங்கமைக்குஞ் சேரச செறிந்து. 27

குறைந்திடினுந் தன்கருமங் குற்றமா மேலோ
நிறைந்தியலு மற்றையதி னேம்—மறைந்திறந்து
தன்கருமத் தைச்செயினுந் தானன்று வேற்றோன
வன்கருமத் தச்சம் வரும். 28

பின்பு விசயன் பெருமானே பாவத்தை
யன்பிலனே னும்புருட னெங்கெத்தால—வன்பதனி
லேவுற்றான் போல வியலு மெனவவனுக்
காவுற்றான் சொன்னா னமைந்து. 29

காமமிது தான் கடுங்கோ பமுமாகித்
தமை நடுக்குணத்துச் சேர்ந்திருக்கு—மாமதெல்லாம்
வாரி யுடன்புசிக்கு மாபாவ மாமிதனை
வைரி யெனவே மதி. 30

தூமத்தா லங்கி சுணையழுக்கா றக்கண்ணாடி
காமக் கருவுற்பக் கட்டதனு—லேமத்துச்
சூழ்வுற்ற தென்னவே சூழப்பட் டிங்கதனாற்
றூழ்வுற்ற திச்செகத்துத் தான். 31

மன்னறிவி னுக்கென்றும் வைரியாய்க் காமமெனு
மன்னுருவு மேவியதா யாங்கனத்த—தன்னவிடம்
போதுநிறை யாத்தமையாட் பொல்லாங் கிதனாலே
மீதணாவு சூழ்ச்சியுறும் மிக்கு. 32

புலன்கண் மனமதுவாம் புத்திநிலை யாகு
மலங்கொளிதற் கென்பர் மதித்தோர்—சலங்கிளரு
மின்னவிது தானிவற்றா லிங்கிவனைத் தான்மயக்கு
மன்னறிவு தன்னை மறைத்து. 33

ஆதலா னீபரதா வாதியிலே வைம்புலனைக்
காதி யுனதறிவு கட்டழித்து—மீதியலிப்
பாவத்தை நீக்கும் படிபா ரதாதன்றோ
லாவத் தலைவதரா வாங்கு. 34

புலன்கண்மே லாமென்பர் போதஞ் செறுக்க
வலங்கொண் மனமதன்மேன் மன்னும்—புலங்கிளரும்
புந்தியதின் மேலாகும் புந்திதனிற் காமந்தான்
குந்திசிறு வாபரமாக் கொள். 35

புந்திக்கு மேற்காமம் புந்தித்துப் புந்தியாற்
சந்தித் தறத்துமனஞ் சார்த்திநீ—வந்தியலுஞ்
சேமமிக வீழ்த்துந் திங்கியற்றும் வன்பகையாங்
காமமது நீத்தல் கடன்.　36

மெய்யமரும் புதநி விடாதென்று நின்றிலனுஞ்
செய்ய கருமச் சிறப்பதனை—வையத்து
வாய்ந்தபுகழ்க் கீதை வளர்மூன்று மோத்துரைத்த
வேய்ந்த பொருண்முடிந்த திங்கு.

## அத்யாயம் 4.

## ஞானவிபாகயோகம்.

நாரா யணனகீதை நாலாமோத் திறனைத்
தீரா பிறவிச் சிறப்புடனே — யோரும
போகத் துடன்கரும முற்றியநு மாறுரைக்கு
மேகப் பலபரிசா லேய்ந்து

இந்தயோ கத்தை யிரவிக்கு யானுரைத்தேன்
அந்த ரவியன் மனுவுக் கானுரைத்தான் — மைந்தனு
மிக்குவா குக்கவனு மேனுரைத்தா னிப்படியாற்
றக்குவாய்ந் தற்றது தான். 1

இன்னே பரம்பரையா லேய்ந்ததனை யீங்கறிவர்
முன்னே யரைச முனிவர்கள் — பின்னேபோய்க்
காலத்தி னுண்மறைந்து கைகழிந்து விட்டதே
ஞாலத்தில் யோக நலம். 2

போதமிகு மிந்தப் புராதனமாம் யோகத்தை
யேத மறவுனக்கிங் கியானுரைத்தேன்—காதலமர்
பத்தனுமாய்த் தோழனுமாய்ப் பண்பான் மறைப்பொ
முத்தமமீ தென்றோர்ந் துகந்து. [ருளா

ஆங்கு விசயன்றா னாதித்தன் முன்பிறந்தா
னீங்குநீ பின்பிறந்தா யெங்ஙனநான்—பாங்கினின்
முன்னுரைசெய் வண்ணமித முற்றுணர்வ னென்றுரை
தன்னுரைசெய் தான்பரமன் றான். [க்கத் 4

என்பிறவி யான நியம்பிற் பலவாகு
முன்பிறவி யானவையு மொக்குமவை—தன்படியை
யானறிவ னெல்லா மிகல்விசயா விங்குநீ
தானறியா யத்தகைமை தான். 5

மேவபிறப் பில்லனுமாய் மெய்த்தன்மை குன்றானாய்
மூவுலகுக் கெண்ணு முறையிறையாந்—தேவுடனே
யென்னுடையா மூர்த்தியினை யெய்தியே யென்னினைவ
தன்னியல்வா லேபிறப்பன் சார்ந்து. 6

அறந்தளரு மக்கால மெக்கால மாங்கே
மறங்கிளர்ந்து பாவம் வளரும்—பிறங்கசர்
வெந்நைத் தருவிக்கும் வில்விசயா வக்காலத்
தென்னைப் பிறப்பிப்பன் யான். 7

நல்லார்க டம்மை நலம்புரிந்து காத்தற்கும்
பொல்லாரைப் பொன்றுநெறி போக்கற்குஞ்—சொல்
முந்தை யறநாட்ட முய்த்தற்கு நான்பிறப்ப [லாரு
ணிந்தவுகந் தோறு மிசைந்து. 8

என்பிறவி யென்கரும மிவ்வண்ணந் திவ்வியமென்
றன்பினொடு முண்மை யறிவுற்றான்—முன்பிறவி
யேய்ந்த வுடல்விட்டே யெதிர்ப்பிறவி யேலாதே
யாய்ந்தெனையே யெய்து மவன். 9

நேயம் பயம்வெகுளி நீக்கியென் றன்மையரே
யாய திறத்தா லடைந்தென்னைத்—தூய
வறிவாந் தவத்தா லனேகரென் றன்மை
செறிவார்கள் பூதராய்ச் சேர்ந்து. 10

என்னையெவ ரெவ்வா றடைந்தியல்வர் யானவரை
யன்னவகை யான்மிகவு மன்புற்றே—பின்னடைந்து
காட்டுவென் மற்றாதலினா லென்னெறியைக் காதலினா
னாட்டெவரும் பின்செல்வர் நன்கு. 11

கருமபயன் காமித்தார் காமத்தா லிங்கே
யொருமையுடன் றேவருட னொன்றி—யருமையினாற்
றாங்கிநின்றஞ் சாகிற்பர் தாழா துலகுதனி
லாங்கருமத் தானபய னார்ந்து. 12

வண்ணங்க ணாலு மருவுங் குணங்களுடன்
பண்ணுங் கருமம் பலவகையா—லெண்ணி
வகுத்தேயான் செய்திடினு மற்றதுசெய் யேனா
ரிகுத்தே யெனைநீ யெறு. 13

எது மிழிசா வெனைக்கருமமென்றெனக்கிங்
கோது பயனாசை யொன்றிலையென்—றீதுணர்ந்தே
யென்னை மிகவறிவான் யாவ னவன்கண்டாய்
முன்னை வினையகல்வான் முற்று. 14

இன்னே யறிந்து கருமத்தை யென்றியன்றார்
முன்னேவீ டெய்த முயல்வாரு—மன்னேநீ
தொல்லையார் தாமுயன்ற தொல்கருமந் தன்னையே
யொல்லையாய் நின்றியல்வா யுற்று. 15

எது கருமமாங் கேதுணர்வா மென்றறியார்
மூதுணர்வி னின்றாரு மோகிப்பர்—மீதுனக்கிங்
கக்கருமந் தன்னை யமர்ந்துரைக்கே னாங்கதனை
மிக்குணர்ந்தே தீங்ககல்வை விட்டு. 16

இக்கருமத் துக்கு மிதில்விவித மானதுக்கு
மக்கரும மல்லா வறிவுக்கு—மிக்க
வறிவுடைமை வேண்டு மதுவுரைக்கி லாங்குப்
பிறிதுணர்வு தானரிது பின். 17

கன்மத்தின் ஞானத்தைக் காணு மவனெவன்றான்
கனமத்தின்ஞானததைககண்டியல்வான்--நன்மைக்கே
தக்கபெரும புத்தி சமைந்தா னவனவனே
யெக்கருமஞ் செய்தானு மிங்கு. 18

எலலா முயற்சியுமொன் றிச்சியா தோர்ந்தியல
வலலானைப் பண்டிதனா யாய்ந்துரைப்பர்—நலலா
ரறிவா லவன்வினைக ளெல்லா மழிந்தே
பொறிவாயிற் பஞ்செனவே போம். 19

கருமப் பயனசையைக் கைவிட்டே யெனறு
மொருமித் துகந்துபுறத தொட்டாப்—பெருமையோன்
மெய்யாா கருமத்து மேலியன்றா னேனுமவன்
செயயா னதொன்றுஞ் செறிந்து. 20

ஆசை துறந் துள்ள மமைந்த வுணர்வினனாய்ப்
பாசமுட னெப்பொருளின் பற்றற்றுப்—பேசியதன்
சாரீர கன்மமே சார்ந்தியல்வான போந்தணையான்
சேரீரு பாவமுஞ் சென்று. 21

பேறிழவி லொத்திருந்து பெற்றததா லுள்ளமைந்து
கூறு மிருதுயரிற் கூடாதே—வேறொருவன்
தன்பாற் பொறாமையிலான் றன்கருமஞ செய்திடினு
மன்பாற் பிணிப்புண்ணா னங்கு. 22

போன நசையினனாய்ப் புன்புலனின் முந்தனாய்
ஞான நிலைகொண்ட நன்னெஞ்சா—யானதொழில்
வேள்வியினுக் காக விரும்பி முயல்வானுக்
கூழ்வினையெல் லாம்போ முடைந்து. 23

செய்யுந் தொழில்கண்மனஞ் சேரும் விதியதனிற்
பெய்யு மவியாற் பெறுந்தொழின்—மெய்யணைந்து
தான்பிரம மென்றுன்னித் தன்பிரம கன்மத்தான்
வான்பிரமத் தன்மையுறும் வாய்ந்து. 24

வேறுசில யோகியர்கண் மேலான தேவரிடைக்
கூறுபடு மெச்சங் குறித்தியல்வ—ரீறில்
பிரமமா மங்கிப் பிறரெச்ச முய்ப்பா
ருரமத்தா லெச்சவுறுப் புற்று. 25

அறிபொறியை யான்றமைத லாமனலிற் பெய்வர்
பிறிதுசில ரோமமெனப் பேணிப்—பொறியனல்வாய்
வந்தியலு மைம்பயனை வாரியுட னோம்பப்பர்
செந்தொழிலி னின்றார் சிலர். 26

எல்லாப் புலனி னியல்வும் பிராணனாற்
செல்லா வியலுஞ் செயலனைத்துஞ்—சொல்லாரு
முள்ளமைந்த யோகவன லுய்ப்பர் சிலருணர்விற்
சொள்ளவது மேல்விளக்கிற் கொண்டு. 27

பொருளெச்சங் பொன்றாத் தவவெச்சம் யோகத்
தெருளெச்சம் சேர்வர் சிலர்கண்—மருளற்ற
வாய்ந்த மறையுணர்வா மன்னெச்ச மேவுவரே
யேய்ந்த வதிவிரக ரிங்கு. 28

மற்றும்பி ராணாயா மத்தியல்வார் வாயுகதி
யுற்றுத் தகைந்தவ குடனுக்கச்—செற்றுப்
பிராண னபானனிடைப் பெய்த லபானன்
பிராணனிலுய்த் தோமிப்பர் பேர்த்து. 29

உண்ணா வவர்நியது மொல்லைப் பிராணனவை
திண்ணா வங்கவற்றிற் சேர்விப்ப—ரெண்ணார்ந்த
வெல்லாரு மெச்ச மவரறிய ரெச்சத்தாற்
பொல்லா வினையொழியப் போந்து. 30

ஆங்கெச்ச மிச்ச மமுதூண் விரும்புமவ
ரோங்குபிர மத்தை யுற்றணைவர்—பாங்காக
விவ்வுலக மில்லெச்ச மில்லார்க்கு மேலாகு
மவ்வுலக மத்தாலுண் டாம. 31

இன்னே பலவகையா லெச்சம் பிரமத்து
முன்னே பரந்த முகஞ்செய்தே—யன்னவை
தான்கருமத் தானவெனச் சார்ந்தறிநீ யாங்குனக்கு
வான்கருது முத்திவரு மற்று. 32

பொருண்மயமா மெச்சத்திற் போதமிகு மெல்லாந்
தெருண்மயமா மெச்சந் தெளிதாங்—கருமமெல்லாம்
ஞானத்து வந்து முடிந்தே நலம்பயக்கு
மானத்தைப் பார்த்தான் மதித்து. 33

அந்த வறிவை யறிநீ யடிவணங்கிச்
சிந்தை யுடன்கேட்டுச் சேவித்தே—முந்தறிவை
யொத்துபதே சிப்ப ருணர்க்குணர்ந் தோராய்த்
தத்துவத்தைக் கண்டிருப்பார் தாம். 34

யாததனை யிங்கறிந்தா லிவ்வண்ண மோகியா
யாததனு லுன்னிடத்து மென்னிடத்து—மேதமறப்
பூதங்க ளெல்லாம் பொருந்துநெறி காண்டிநீ
யாதங் கறிவென் பதம். 35

பாவிகளெல் லாரினுநீ பாவத்தை மிக்கியன்று
மேவுதி யாகிலுமிம் மெய்யுணர்வாற்—ருவிவருந்
தெப்பத்தை மேற்கொண்டு தீவினையாம் வெங்கடலைத்
தப்பக் கடப்புதிநீ தான். 36

அங்கிவிற கெல்லா மெரிப்பதுபோ லவ்வறிவு
பொங்கிவரு கன்மம் பொடியாக்கு—மிங்கில்லை
மெய்யறிவிற் றூயதுதான் மிக்கவதும் யோகிதான்
பையவெய்து நெஞ்சிற் பயின்று. 37

ஆதரவு மிக்கா னறிவுபெறு மாங்கதனின்
மீதமருந் தன்மையான் வென்றுபுலன்—போதமது
பெற்றொல்லை யாவகே பெரிதான சாந்தியினை
யுற்றெய்தும் யோகி யுணர்ந்து. 38

அறியாது யாதரவு மற்றே மயக்கஞ்
செறிவான் விநாசத்தைச் சேரும்—பொறிவாயில்
வர்தலா திம்மை மறுமையுட னின்பந்தான்
சந்தேகப் பட்டான் றனக்கு. 39

ஆனயோ கத்தா லமர்கருமத் தன்பற்று
ஞானயோகத் தான்மயக்க நன்கறுத்து—வானையோர்
நெஞ்சந் தனைக்கரும நேர்பிணியா வாகியவத்
தஞ்சந் தனஞ்செயனே சார். 40

ஆதலினு னீயுள் ளறியாமை யால்வந்த
போதமயக் கத்தைப் புகருடைய—மீதறிவாம்
வாளா லறுத்து வளர்கரும யோகத்து
மூளா வெழுநீ முயன்று. 41

என்று கரும மிகையுடனே யோகத்தை
நன்று புணர்வித்து நறவிதை—யொன்றியவிக்
காலாமோத் தாலுரைத்து நாதனருள் செய்தபொருள்
மேலாய் முடிந்ததிது மிக்கு.

## அத்யாயம் ௫.

## ஸந்யாஸயோகம்.

அண்ண லருள்கீதை யஞ்சாமோத துக்கருமந்
திண்ண முணாவதனை சோந்தமைந்த—வண்ணமது
சிந்தை தெளியத தெளிவுற றுரைக்குமதே
முந்தை மறைநெறியை மூண்டு.

கரும விடுமறிவுங் கண்ணவதற் பின்னு
மொருமையுடன் யோகு முரைத்தி—யிருமையிலு [யை
மொன்றுரைப்பா யென்றுரைத்தான் பார்த்தனுயரிறை
நின்றுரைத்தா னிச்சயத்தை நேர்ந்து. 1

இக்கருமயோகமது விட்டுணர்வா மிவ்விரண்டுந்
தக்கநலஞ் சாதிக்குஞ் சாதனமா—மக்கருமம்
விட்டிய றன்னின் மிகநன் றதன்செயலிற்
பட்டியலு மாறு பயின்று. 2

வெறுப்புநசை யற்றவவன் விட்டவனு மென்றும்
பொறுப்புடனே தன்னிருமை பூண்ட—செறுப்பகற்றி
நின்றான் விசயனே நீள்வினையின் கட்டுவிட்டுச்
சென்றான் சுகத்துச் சிறந்து. 3

சாங்கியமும் யோகமதுந் தானறியார் வேறென்பா
ராங்கதனை நன்கறிவா ரைந்தரையா—ராங்கவற்றி
லொன்றுதனி னின்று முடனியல்வா னவ்விரண்டி
னின்றபய னெல்லா நிகழ்ந்து. 4

அறிவாராஞ் சாங்கியருக் காகுபயன் கன்மச்
செறிவாராம் யோகியர்க்குச் சேரு—நெறியாலே
யொன்றெனவே சாங்கியமும் யோகமது முன்னினவ
னன்றெனவே கண்டா னலம். 5

ஏவுந் துறவறிவிங் கெய்தவறி தாகுமுனே
சோலுமயோகத் தக்கருமங் கூடாமல்—மேலுந்தா
னூற்று னியோக முயர்முனிவன் றூழாமற்
பெற்றன பிரமவுயிர்ப் பேறு. 6

ஒன்றியயோ கத்தா லுளந்தெளிந்து தன்வசமாய்
வென்றுபுல னைவ்வுயிரு மேவினனாய்—நின்றவவ
னெல்லாக் கருமமியற்றினு மப்பயன்கள்
செல்லா வவனிடையிற் சேர்ந்து. 7

காட்சிமுத லைந்தின் கதிகண் டயிலுயிர்த்தன்
மாட்சியுரை மற்றவையும வன்புலன்க—ளாட்சியினிற்
றன்பயனிற் செல்லுமெனத் தான்மதித்து யானியலே
னென்பதறி வான்யோகி யிங்கு. 8

காதலதுவிட்டுக் கருமம் பிரமமெனு
மூதுயிரிற் றானமைத்து முற்றியல்வான்—றீதான
பாவத்தின் மன்னான் பதுமத் திலைநீரின்
மேவப் படாததுபோன் மிக்கு. 9

காயத்தா னெஞ்சாற் கருத்தமரும் புத்தியான்
மாயத்துச் சேரா வரும்புலனா—னேயத்து
நீக்கத் தடன்கரும நின்றியல்வர் யோகியர்க
ளாக்கத் துளந்தெளிவை யுற்று. 10

ஏற்ற மிகும்யோகி யியல்கருமப் பேறுவிடுத்
தாற்ற நிலைமை யடைந்தியலு—மூற்றமில்லாக்
காமத்தா னந்தக் கருமம் பலனசையாந்
தாமத்தாற் கட்டுண்ணுந் தான். 11

ஒன்பதெனும் வாச லுடையபுர மாமுடலிற்
றன்பயிலுஞ் செய்தியெனத் துணியலா—னென்பதனா
லேது மியலா னியற்றான் சுகமிருக்கு
மோது புலன்வென்றோ னுற்று. 12

கத்தாவா குந்தன்மை கன்மங்க ளாக்கவற்றி
லொத்தாம் பலன்சே ருலகுக்குத்—தத்துவமா
நின்றவுயிர் தான்செய்யா நேர்நடக்கு மாறிதுதா
னென்றியமுன் வாதனையா லுற்று. 13

ஆங்கொருவன் றீவினையு நல்வினை யும்பெரியோன்
பாங்கினிற் றான்வாங்கும் பண்பினா—லீங்கறிவு
மாய வினையான் மறைந்தன்றி மோகத்தி
லாய வுயிர்க ளவை. 14

அந்த மயர்வை யறிவா னசிப்பித்துச
சிந்தை தெளிந்து சிறப்புடையோர்—தந்தமது
பேரறிவு தானே பகலவனிற் ப்டுடைத்தாய்
நேரறிவு காட்டு நிறத்து. 15

அப்புந்தி யந்தமன மந்நிலைமை யப்பயனா
மிப்புந்தி யால்வினையை யீடழித்தோர்—மெய்ப்புந்தி
மீளா வகையுடைய மெய்ப்பயனை நண்ணுவரேன்
மாளா வுயிரின் வழி. 16

ஆன்றுணர்ந்த வந்தணனா யத்திநாய் நீசனெனத்
தோன்றுடலந் தோறுந் தயக்கமைந்தங்—கேன்றவுயி
ரொக்க நிகழு முணர்வோ ரெனமறையிற்
றக்க வறிவுடையோர் தாம். 17

இப்பிறவிச் சங்க மிவரால் வெலப்பட்ட
தொப்பி லெவர்க்குமன மொத்தடைந்த—தப்படியாத்
தீதிலா வொத்தவுயிர் சீரார் பிரமத்துள்
மீதுதான் நிற்குமவர் மிக்கு. 18

இன்பமது பெற்றுகவா னின்றாத தண்களடுங்கான்
றன்படியிற் புந்தி தனை நிறுத்தி—முன்பயிலு
மோக மொழிந்திறையை முற்றுமறிந் நிவ்வுயிரின்
போகமதி னின்றமைந்தான் பூண்டு. 19

புறம்பயிலுந் தொத்தற்ற புந்தியனு யுள்ளே
சிறந்தவுயி ரின்பமெவன் சேருந்—துறந்தவவன்
சேரும் பிரமத்திற் சிந்தையனு யந்தமிலா
தாருஞ் சுகமடையு மாங்கு. 20

புலன்சேர் பொறியில்வரும் போகங்க டுன்பக்
குலஞ்சேருங் காரணமாங் கோளா—னலஞ்சேர்ந்து
நிற்பதுவு மில்லை நிறைஞான வானவற்றி
லற்பமுகப் பெய்தா னமர்ந்து. 21

காயங் கழிப்பதற்கு முன்னிலிக் காலத்தே
மாயந் தருகாமம் வல்வெகுளி—யாயவிவை
வேகத்தைத் தானடக்க வல்லா னவன்யோகி
போகத்தைத் தானடையும் போய். 22

தன்னுளமரின்பத்தோன் றன்னிழலிற்றுன் மகிழ்வோன்
றன்னு ளுயர்சோதி தானுடையோன்-றன்னுருவே
யான பிரமமா மந்தப் பிரமத்தைத்
தானடையு மின்பந் தழைத்து. 23

கண்ட முனிவர் கடுவினையின் கட்டழித்துக்
கொண்ட வுயிரிருமை கூர்ந்ததுயர்—விண்டறவே
நெஞ்ச நிறீஇயுயிர்க்கு நீடின்பம் பூண்டவரே
யெஞ்சாப் பரம்பெறுவ ரேய்ந்து. 24

இவ்வாறு காம வெகுளி யடக்கிமதி
யெவ்வாறு தாமனத்தை யெண்ணேருக்—கெவ்வாறு
மீளாது துய்க்கு மிகுபிரம வானந்த
நீளாகு மென்று நிகழ்ந்து. 25

புறப்பற்றை நீக்கிப் புருவத்துட் கண்ணுற்
சிறந்தொக்க மூச்சிருகாற் செலல—நிறுத்துமனப்
புந்தியான் வென்ற பயவெகுளி யானவனே
சிந்தையான் முத்தன் சிறந்து. 26

வேள்விதவங் கொள்வோனாய் மிக்கனைத்து மென்வசமா
வாள்வினைய னாகி யனைத்துலகு—நீளுற்ற
யெல்லா வுயிர்க்கு முறவா மெனையறிந்த
நல்லான் பெறுஞ்சாந்தி நன்கு. 27

மெய்யுணா விளைனே வியனகருமத தாாந்து

ப,

பிதுமுடிந்த தோர்ந்து.

## அத்யாயம் 6.

# அத்யாத்மயோகம்.

அதத னருள்கீதை யாருமோத் தாற்கருமத்
தொதத தெளிவைத தெரிந்துரைக்கு
.. .. / .. .. ..
.. .. .. .. ..

கன்மபல னண்ணுது காரியமென் றுன்னியவத்
தன்மையுமத்துய்வன திற்சார்ந்தியல்வா—னன்மையமர்
ஞானியவன் யோகியவ னல்லங்கி யிற்கிரிசை
தானிகழா னென்றுஞ் சமைந்து. 1

கூரறிவு சேர்துறவென் றெத்தைக் குறித்துரைப்பர்
பாரறிவில் யோகமதாம் பாண்டவனே—தூரநசை
விட்டியலா தாஞெருவன் மெய்கரும யோகியெனப்
பட்டியல மாட்டான் பயின்று. 2

ஞானயோ கத்தி னயாசுதற வேண்டுமுனிக்
கானயோ கக்கரும மாமுதலா—மேனலஞ்சேர்
நிக்கமர்ந்தே யோகத்தின் மேலா மவனுக்கே
தக்கமுத லாகுஞ் சமம். 3

கோளும் புலன்பொருளிற் கூட்டுகை கருமத்தி
லேலு நசையறுத்தா னெப்பொழுது—மேலுயர்ந்தே
யெப்பொருளின் சங்கற்பம விட்டேறு ம யோகியென
வப்பொழுதே பேருடைய னும். 4

தன்னைத்தன் னெஞ்சாலே தானெடுப்பான் றன்னெஞ்
றன்னைத் தளாவிக்கத் தானியலா--னன்னவனு [சாற்
தன்னுடைய நெஞ்சு தனக்குறவு தன்னெஞ்சே
தனனுடைய வான்பகையாந் தான். 5

எவன்றன்னாற் றன்னெஞ்ச மேனறுவெலப் பட்ட
தவன்றனக்கந் நெஞ்ச முறவாகு—மெவன்றன்னா
லான்றநெஞ்சில் லாதவனுக் காங்கதுமா றேயியலு
மேன்ற பகைவன்போ லிங்கு. 6

சீத மழலின்பந் துன்பஞ் சிறப்பிகழ்வின்
மீதமைவு சேர்ந்துமிக வென்றமனம்—போதந்
திகழ்ந்தவவ னெஞ்சிற் றெளிவுறவே நிற்கு
நிகழ்ந்த வுயிர்பரமா நேர்ந்து. 7

ஞான விவேகத்து நன்குகந்தார் தன்மையனு
யான புலன்வென் றமர்யோகி—தானேட்டிற்
கற்கனகத் தொத்தியல்வான் காட்சியினுற்றக்கானென
றொற்கமறுஞ் சொற்சேரு முற்று 8

நன்னெஞ்சன் றோழன் பகைவ னயப்பறியான்
பன்னு நடுவோன் பழிவெறுப்போன்—றன்னளவி
லுற்றா ருயர்கருமர் பாவிகளா லொத்தமனம்
பெற்றான் மிகத்தக்கான் பின். 9

தானே யிருந்து தனியிடத் தூத தன்சிந்தைக்
காணு மனமடக்கி யாசையற்றுத்—தானேய்ந்த
வெத்துவக்கு மற்ற வெழில்யோகி தன்னை யெண் மு
த்துவதிற் சார்விப்பான் றன். 10

தூயநிலத் தோக்கர்தாழ் வற்றதகில் தோலதுமே
லாயதுகி ழாக்குசமா மாசனத்த—மேயதன்
புத்தியொரு மித்துப் புலனடங்கி யோகத்தைச
சுத்திபெறச செய்வான் றொடர்ந்து. 11

தன்காயஞ் சென்னிகளந் தாங்கிச் சலியாமன்
முன்காண மூக்கைக்கண் மொய்த்ததிசைப்-பின்காணு
தாறியஞ் சாதே யறத்துறனுய் நெஞ்சடக்கித்
தேறியென் பால்விருப்பன் சேர்ந்து. 12

இன்னேநெஞ் செந்நாளு மென்னிடையிற் சேர்யோகி
தன்னேர் மனமாக்கித் தானிறுத்தி—மன்னேர்ந்த
வானந்த மேலா யமர்சாந்தி யென்னிடையிற்
றானந்த மற்றடையுந் தான். 13

உண்ணுமவ னுக்குமிக வுண்ணா தவனுக்குங்
கண்ணுறங்கு வோர்க்குங் கடிந்தோர்க்கு—மெண்ணுங
மண்ணாளும் வேந்தனே மாயோக மிவ்வோர்க்கு[சான்
நண்ணாது காணு நயந்து. 14

தக்க வுணவியற்றி தன்கருமத் துண்மையற்றி
தக்க துயிலுணர்த்தி தானமர்ந்த—தக்கவனுக்
கெவ்வாறும் யோக மிருந்துயரை நீக்கியே
'யவ்வாறு வந்தியலு மாங்கு. 15

எப்போது நெஞ்ச மினிய வுயிர்தன்னிற்
றப்பாது பூண்டு தனிநிற்கு—மப்போது
காம மனைத்திற் கழிந்தநசை யோகியெனு
நாம முடையனு நன்கு. 16

வாயு விலாதிடத்து மன்னும் விளக்கதுதா
னேயு சலனமறு மெவ்வாறு—தூயமன
நன்மையினிற் சேர்ந்தியலு நல்யோகி யோகிதன
தன்மையினுக் கொப்பதுவே தான். 17

நெஞ்சுதா னேதி னிருத்தமாம் யோகத்தா
லெஞ்சலிலா தென்று மினிதமரு—நெஞ்சமா
யேதின் மனத்தாலே யினிய வுயிர்கண்டு
மீததனிற் றானுகக்கு மிக்கு. 18

புலங்கடந்து யோகத்துப் புந்தியினாற் றோன்று
நிலங்கடந்த வின்ப நுகர்வோ—னலங்கலந்த
புன்மையிலா னந்தப் புணர்ப்பெய்தி நின்றவவன்
றன்மையினின் றுஞ்சலியா தான். 19

யாதொன்றைப் பெற்றா லதனில்வே றோர்பேறு
மீதென்று பின்றான் மிகமதியான்—போதமுடன்
மிக்கதி னின்றான் மிகுதுன்ப மேலிடினுந்
தக்கவதிற் பின்சலியான் றான். 20

யோகமென்று பேராம் வியோக மதுதுன்ப
மாக வுறும்யோக மஃதறிவான்—யோகமது
தீங்கின்றி நின்ற திசைப்பற்ற நெஞ்சினாற்
பாங்கொன்றி யொன்றப் படும். 21

தன்னிலாங் காமங்க டாமெல்லா நெஞ்சால்விட்
டன்ன புலனனைத்து மான்றடக்கி—மன்னுநிலைப்
புந்தியினின் மெள்ளமனம் பூண்டாங் குயிர்மன்னச்
சிந்தியான் வேறொன்றுஞ் சேர்ந்து. 22

நில்லா துழனெஞ்சு நீங்குமவை மேலவற்றிற்
செல்லாமைத் தன்வசத்தைச் சேர்விப்பான்–நல்யோகி
யாறினான் றீங்குசெருக் கற்றுப் பிரமவுயிர்
தேறினா னின்பமிகச் சேர்ந்து. 23

இவ்வண்ண மேதன்னை யோகத்தி லேவிடுத்துத்
தெவ்வண்ண வல்வினைகள் செற்றென்று-மெய்வண்ண
யோகி பிரமத் தணைந்தீறி லின்பத்தா
னாகியுயி ரேலெளிதே யாங்கு. 24

எல்லா வுயிரு மெனதுயிர்போ லென்னுயிர்தா
னெல்லா வுயிர்போ லெனக்காணுஞ்—சொல்லார்ந்த
யோகஞ்சேர் நன்னெஞ்ச னெவ்விடத்து மொத்துயிர்க
ளைகஞ்சேர் வண்ணமறிந் தேய்ந்து. 25

என்றன்மை யாலுயிர்களெங்குமெனைக்கண்டவற்றைத்
தன்றன்மை யாலென்பாற் றான்காண்பான்—சிந்தையி
னான்றோன்றா வாறில்லை நன்குணர்ந்தான் றன் [னில்
றான்றோன்றா வாறில்லை தான். [னிடையிற் 26

எங்கு நிகழ்ந்திருக்கு மென்றன்னை யேகமாத்
தங்குஞ் சமநினைவான் றானுணர்ந்தா—னங்கங்கே
யெவ்வா றியன்றிடினும் யோகியவ னென்னிடையி
லவ்வா றியன்றவனே யாம். 27

தன்னொத்த வெவ்விடத்து மன்னு சமமாக
மன்னொத்த வின்பம் வளர் துன்ப—முன்னனுறி
லாங்கவனே சால வதிநாம யோகியென
வோங்கறிவார் தாமதிப்ப ருற்று. 28

அண்ணலேப்பின் கேட்டா னமர்விசய னீயுரைத்த
வெண்ணமரு மொப்பா மெழில்யோகந்—திண்ணமிது
மன்னு நிலைமை மதருத னாகானே
னுன்னுமனஞ் சஞ்சலத்தா லோர்த்து. 29

வன்னெஞ்சு சஞ்சலமாய் மாறாய் வலிந்தடரு
மந்நெஞ்சு காற்றைப்போ லான்றடக்கித்—தன்னி
லரிதென் றிருப்பனென வாங்கவனுங் கேட்கச்
சுரிசங்கன் றானுரைத்தான் சொல். 30

கோராக நின்றடக்க நில்லா தரிதுமனங்
காரார் கொடைத்தடக்தோட் கௌந்தேயா—சீராரும்
யோகத் திடைப்பயில்வா லேலுந் துறவதனா
லாகத் தடக்க லாம். 31

தன்னிலையா நெஞ்சுதன்னாற்சார்வரி தாம்யோகமென்
றெண்ணினைவ தாரு மிதுபின்னை—முன்னிலையு
நெஞ்சான் முயன்றவனு னேரே யுபாயத்தா
லெஞ்சா தடையலா மிங்கு. 32

ஆவகு விசய னமலன் றனைக்கேட்டா
னீவகுவிருப் புற்று ணியல்வற்றுப்—பாவகுமனந்
தக்கயோ கத்துச் சலித்தல் கதுசேரா
தெக்கதியைத் தானடையு மிங்கு. 33

முன்பயன்சேர் கன்ம முழுதொழிந்து மேற்பிரமந்
தன்பயனு நல்வழியிற் சாராதே—பின்பவன்றான்
றஞ்சமில்லா தவ்விரண்டின் தானழிவிச் சின்னமா
மஞ்சௌவே மாயுமோ மற்று. 34

மிக்க மயக்கிதனை மீண்டொன் றொழியாமற்
றக்க பரிசறுக்கத் தக்கவனீ—மிக்கோரி
லுன்னை யொழிய யொழிப்பா ரிதகண்ணு
பின்னையெவ ருண்டு பெயர்ந்து. 35

ஆய வவனுக் கறிய வுரைசெய்தான்
மேயவுல கத்தினு மேலிடத்து—மாய்வவனுக்
கில்லாதா னன்றி யிவன்றன் விசயனே
பொல்லா நெறியிற் புகான். 36

புண்ணியர்க ளெய்துபெரும் போகத் தினிதமர்ந்தே
நண்ணியுதிற் பல்லூழி நாளிருந்து—திண்ணியசீர்
செல்வகலர் தூயார் சிறந்தமனை யிற்பிறக்கு
நல்வினையோ கஞ்சிதைந்தா னன்கு. 37

மற்றதுவே யன்றி வளர்மதிசேர் யோகியர்க
ளூற்ற குலத்தி லுதயமா—முற்றலகி
லிவ்வாறு சேரு மிதிற்பிறவி தான்மன்னு
மெவ்வாறு தானரிதே யிங்கு. 38

ஆங்கேதன் முன்பிறவி யானயோ கத்துணர்வைப்
பாங்கேலும் புத்தியினிற் பற்றியே—யீங்கமர்ந்த
பின்னு மதின்முயற்றி பெற்றியன்று பேறதனின்
மன்னுமவ னுகுமே மற்று. 39

முன்னியலும் யோக முயற்சி வசமறவே
பின்னிவனைத் தன்வசமாம் பேறளிக்கு—மன்னுநசை
யோகத்தி லுற்ற னுரைசேர் பிரமமா
மாகத்து மீதியல்வா னும். 40

மிக்க முயற்றியுடன் மேவியல்வான் பல்பிறப்பி
லொக்க வருநல் லுயர்வினையிற்—றக்கமர்ந்து
சாருந் துயரகன்று தானியன்ற னய்ப்பின்னுஞ்
சேரும் பரகதியைச் சென்று. 41

தவம்புரிந்தார் தன்மை யுணர்ந்தார் கருமத்
தவந்தியன்றார் தங்களிலும் யோகி—யவன்சிறந்து
மிக்குணர்ந்தா னென்றுணரப் பட்டான் விசயாநீ
தக்குயர்ந்த யோகமே சார். 42

முன்னுரைத்த யோகிகண்முற்றுமென்பான் மனஞ்சேர்
தன்னுரைப்பான் மேல்விரும்பித் தானென்னை -மன்னு
பெற்றே பணிந்தான் பிறங்கியுயிர் யோகியென [நலம்
வற்றோனான் கொள்வ னுகந்து. 43

யோக வதியோகி யோகத்து நாலுவகை
போகமது மேலா வுயர்நிலைமை —மேகநிக
ரன்ன லருளிதை யாறுமோத தினபொருளாத
நின்ன முடிந்ததிது சோந்து

சோக முயிருணர்வு தொல்கருமச் செய்தியதி
லாது மறிவுயர்த்தி யார்வகைகள்—யோகமுயிர்
காட்சி யிவற்றின் கருத்துமுத லாறேத்தின்
மாட்சிமை சொல்லும் வகை.

# பகவத்கீதை வெண்பா.

## குறிப்புரை.

### பாயிரம்.

1. பார்த்தற்கு—அர்ஜுனனுக்கு. புன்பொருள்—இழிவான விஷயம்.
2. மாமாது—லக்ஷ்மி. மாறன்—நம்மாழ்வார். பூதூர் வாழ் போதமுனி—இராமாநுஜர். நசசி—விரும்பி.
3. வேதம்வகுத்தவியன் முனிவன்—வேதவியாஸர். ஒத்து—அத்யாயம்.
4. தெருள்—ஞானம்.
5. இருள்நூற—அஞ்ஞான இருள்கெட.
6. அத்தியாது—விரும்பாமல்.
8. இறை—பகவான்.

10. ஐவேள்வி—பிர்ஹ்ம-பிதிர்-தேவ-பூத-மனுஷ்யயஜ்

11. அற்றம்—உண்மை.
12. அலர்—சஞ்சலம்.
13. மானம்—பெருமை.

---

## அத்யாயம்—1.

# அர்ஜுன விஷாதயோகம்

அர்ஜுனவிஷாதயோகம்—பகவானுக்கும் அர்ஜுனனுக்கும் நடந்த ஸம்வாதத்தில் அர்ஜுனனது விஷாதமாகிய யோகத்தினைக் கூறும் பாகமென்பது பொருள். விஷாதம்—மனத்திடனழிந்து கலங்கி வருந்துதல். விஷாதமெனினும் சோகமெனினும் ஒக்கும். யோகம—(நன்மையிற்) சேர்ப்பது; அஃதாவது, நேராகவாயினும பரம்பரையாக வாயினும் முக்திக்கு ஸாதனமான வழி. ப்ருஹ்மவித்யையைக் கேட்டலாகிய நன்மையில் (அர்ஜுனனைச்) சேர்ப்பதனால் அர்ஜுனனது விஷாதம் யோகமெனப்பட்டது. ஸம்ஸார அனர்த்தங்கண்டுணர்ந்தவனாய் மனங்கலங்கித் தவிப்போனுக்கே ப்ரு

ஹமவித்யையில் அதிகாரம் என்பதை "பகவானே! ஆத லின், யான் வருந்துகின்றேன். என்னைச் சோகத்தி னின்றுங் கரையேற்றி யருளவேண்டும்" என்னும் பொருளுள்ள சுருதியா லுணர்க.

1. முன்னரில்லா திருந்த தர்மத்துக்கு உற்பத்தி ஸ்தானமாகியும் இருந்ததற்கு அபிவ்ருத்தி ஸ்தானமா கியும் வித்துக்கு விளை நிலம்போல விளங்கியதால் குருக்கள் வாழ்ந்த நிலத்தைத் 'தன்மநிலம்' என்றார். பாண்டவர்களுந் தன்மைந்தரா யிராநிற்க அவர்களை வேறு பிரித்து 'என் மைந்தரும் பஞ்சவரும்' என்றத னால் திருதராஷ்டிரனுக்குப் பாண்டவர்கள் பாலுள்ள த்வேஷத்தை வெளிப்படுத்திக் காட்டுகின்றார். சுருதி, ஸ்மிருதி முதலியவைகளிற் பிரஸித்தமான புண்ணிய பூமியாகிய இந்தத் தன்மநிலத்தில் போர்புரியக் கூடி யிருப்பதால் அந்நிலத்தின் மகிமையால் தன் மைந்தர் களும் புத்திதெளிந்து பஞ்சவர்களிடத்திருந்து தாங் கள் கபடமாய் ராஜ்யத்தை அபகரித்தது பிழையென்று தெரிந்து, மிக்க அனுதாபத்துடன் பாண்டவர்களுக்கு அந்த ராஜ்யத்தை யுத்தமின்றியே கொடுத்து விட்டார் களானால் அதுவே தனக்கொரு அபஜயமா மென்று கருதினவனாய் அதைத்தடுக்க நிச்சயமான வேறொரு பாயமுங் காணாதவனாய்த் தடுமாற்றமுற்று மிக்க பட படப்புடன் தன் மனத்துட்கிடந்த கருத்தைப் புலப்பட

'தன்மநிலமாகுங் குருநிலத்தில்' என்று, வினவ ஆரம்பித்தனன். ராகம், துவேஷம் முதலிய தோஷங்களை நன்றாக ஜயித்தவராகையால் நடுவுநிலைமை குன்றாமல் உள்ளது உள்ளபடியே சொல்லவேண்டுமெனக் கருதிச் 'சஞ்சய!' என விளித்துக் கேட்ட திருதராஷ்டானுக்கு ஏற்பச் சொன்னான் ஆகையால் 'சமைந்து சொன்னான்' என்றாரென்க. சஞ்சயன்-நன்றாக (ராகத் வேஷாதிகளை) ஜயித்தவன். வியவகார நேத்திர மிழந்தவனாயிருப்பதோடு புத்திர வாஞ்சையே மேலிட்டுத் தர்ம நோக்கத்தையு மிழந்தவனாயிருத்தல் பற்றிப் பெயரைச் சொல்லாமல் 'அந்தன்' எனக்கூறினாரென்க. அமர்—யுத்தம்.

தன்ம நிலத்திற் சேர்ந்ததனாற் புத்தி தெளிந்து தன் புதல்வர்கள் ராஜ்யத்தைத் திருப்பிக் கொடுத்து விடுவார்களோ என்ற சங்கையால் கேட்கின்றானென்பதை ஞான திருஷ்டியாலறிந்தவ ராகையால், சஞ்சயர் 'நீ அவ்வாறு சங்கைப் படவேண்டா. தன்ம நிலஞ்சார்ந்தும் நின் புதல்வர்கள் திருந்தினார்களல்லர், பொறாமையே மேற்கொண் டிருக்கின்றார்கள்' என்பதாக முதற்கட் டுரியோதனனது துஷ்ட வியாபாரத்தையே கூறுகின்றாரென்க. வேந்தனாகிய துரியோதனன் தன் பால் ஆசாரியனையும் அழைப்பிக்கக் கூடவரு விருக்க இங்கே. துரோணனையாற் சென்றானென்பதனால்

பாண்டவ சேனையைக்கண்டு துரியோதனன் பெரிது மச்ச முற்றானென்பதையும். சென்று செப்பினனென் னமல் 'சென்றடைந்து செப்பினன்' என்பதனல் தனுர்வித்யா ஸம்ப்ரதாய ப்ரவர்த்தகரான தனது குருவாகிய துரோணரை ஸ்வரக்ஷார்த்தம் சரணம் புகுந்தானென்பதையும் ஸஞ்சயர் திருதராஷ்டிரனுக் குக் குறிப்பாயுணர்த்தினரென்க. ஆளழகே யல்லா மல் வார்த்தை யழகொன்று மில்லை யென்பார் 'தாரார் துரியோதனன்' என்றார். தார்—பூமாலை.

3. பாண்டவர்கள் துரோணருக்குப் பிரியமான சிஷ்யர்களாகையால் ஒருவேளை அப்பாண்டவர்களின் வில்வன்மையைக் கண்டு மகிழ்ந்து இவர் போர்புரியா மல் நின்று விடுவரோ என்ற சங்கையுடையவனகை யால் சத்ருக்கள் செய்யும் அவமதிப்பைத் துரோண ருக்கு அறிவித்துக் கோபமூட்டும் பொருட்டுப் பார் என்று தொடங்கி இப்பாசுரத்தைச் சொல்லலானனெ ன்க. தங்களைப் போலொத்த மகானுபாவர்கள் சமீ பத்திலிருப்பதையுங் கவனியாமல் சற்றேனும் பய மின்றி யெதிர்த்து நிற்கும் பாண்டு புத்திரர்களுடைய பெரியதான இச்சேனையைப் பாராயென்கிறான். அவர்கள் அவமதிப்பாலாவதென்? என்றொழியப் போ காதுகாண். தங்கள் சிஷ்யனையன்றோ படைத்தலைவ

னாகக் கொண்டெதிர்க்கக் கோலினார்கள் என்பதைத் தெரிவிக்க 'நீ கொடுத்த வண்மையினாற் காக்கும்' என்கிறான். திருஷ்டத்யும்நன் என்னாது 'பாஞ்சாலன் றந்தமகன்' என்றது த்ருபதனுக்கும் துரோணருக்குமுள்ள பழைய விரோதத்தைத் தெரிவித்துக் குரோதத்தை யெழுப்புவதற்காக வென்க. உபேக்ஷிக்கத்தக்கவனல்லன் என்பான் 'மதியுடைமை'யினான் என்றும். அம்மதிதானும் அதிசயித்தன்றோ விருப்பது என்பான் 'சீரார்மதியுடைமை' என்றும் குறிப்பதை யுணர்க. இனி, பராக்காயிருக்காமல் கார்யத்திற் கண்ணுடையவனாயிரு என்று வற்புறுத்த 'பார்' இச்சேனையை என்று சுட்டிக் காட்டி மனத்தைத் திருப்புகிறான். இனி மற்றோர்பொருள் தோன்றுமாறு:-துரோணர் பாண்டவர்களிடத்தில் பிரீதியுடையவராகையால் 'பாண்டவர்கள் ஆரியனே!' என விளிக்கின்றானென்க. சத்ருவான உன்னைக் கொல்ல உன்னிடத்திலேயே வித்யை கற்றானே அவனல்லவோ புத்திமான் என்பதைக்காட்ட 'சீரார் மதியுடைமை'யென்றும், உன்னுடைய வதைநிமித்தமாகவே நோற்றுப் பெற்றவனென்பதை யறியாமல் பகைவன் புத்திரனை 'பாஞ்சாலன்றந்த மகனுக்கு' நீ வித்தையைக் கொடுத்த மதியின்மையாலன்றோ எனக்கு இவ்வாறு நேர்ந்தது என்பதைக்காட்ட 'பாஞ்சாலன்றந்தமகன்—சீரார், மதியுடைமை நீ கொடுத்த வண்

மையினால் காக்கும்' என்றும், இஃவெட்கக்கேட்டை யாருடன் விளம்புகேன்! நீயே காணாய் என்பதைக்காட்டப் 'பார்' என்றும் இஃதோர் புதுமையென்பான் 'வியப்பு' என்றும், இது விதியால் வந்ததென்பான் 'விதியுடைமைபூண்ட வியப்பு' என்றும் ஆற்றாமைப்பட்டுரைக்கின்றானென்க. தன்மகிலத்திருந்தும் இவ்வாறு தனது ஆசாரியனையே இகழ்ந்தும் சினந்தும் பேசத்துணிந்தானுக்குத் துஷ்டபுத்தி தொலைந்து தெளிவு எங்கிருந்துண்டாகும் என அந்தனுக்கு ஸஞ்சயர் அறிவிக்கலானாரென்க.

4. 5. பாஞ்சாலன்மகன் ஒருவன்மாத்திரமேயோ! போரில் வீமனுக்கும் அர்ஜுனனுக்கும் நிகராகச்சொல்லத்தக்க வில்லாளர்களான, யுயுதானன், விராடன். பாஞ்சாலன் முதலிய பலரிருக்கின்றார்கள், ஆகையால் உதாஸீனமாக இருக்கவொண்ணாதென்கின்றான். வென்றியமர்—என்பதற்கு ஜயம்பொருந்திய என்றும் போரில் வெற்றியையுடைய என்றும் பொருள்கொள்ளலாம. நின்றிகல்வோன்—யுயுதானன். சஸ்திரசாஸ்திரங்களில் வல்லவனாய்ப் போரில் தான் ஒருவனாயிருந்தே பதினாயிரம்பேரை வெல்ல வல்லவன் மகாரதனாம். மாரதன்—மகாரதன். சத்துருக்களுடைய சேனை இப்படிப்பட்ட மகாரதர்களான சூரர்களோடு கூடினதாக

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY

விருக்கிறதென்று சொன்னதினால் சமரத்தை நிறுத்திச சமாதானமாய்ப்போய்விடு என்று ஆசாரியர் சொல்லு வரோ என்று சங்கித்து நம்மவர் சேனையையும் பாரெ ன்பான் 'அது நிற்க, கேளாய்—நமர்முயற்றி தன்னை நயந்து' என்று சொன்னனென்க. முயற்றி—முயற்சி. "முயற்றி சுமந்தெழுந்து முந்துற்று நெஞ்சே" என்பது பெரிய திருவந்தாதி—1.

6. வேதங்களெல்லாம் வல்ல பிராமணோத்தமராகி ய உமக்குத் தெரியாததுமொன்றுண்டோ என்பான் 'வேதியனே முன்னு' என்று புகழ்கிருனென்க. மின்னு நூல்—மின்னலைப்போன்ற பூநூல். 'விண்ணிழிந்த— மின்போலு நூன்மார்பா' என்றார் பிறரும். இனி சா ஸ்திரங்களையறிந்த என்றுரைத்தலுமாம். பிராமணரு கிய நீர் யுத்தவிருப்பமில்லாமல் விமுகராயிருந்தாலும் அதனால் எனக்கு ஒரு கேடுமில்லை, என் சேனையிலும் அநேக வீரர்களிருக்கிறார்கள் என்று தெரிவிக்கு நோக் கத்தாலும், சிஷ்யரிடத்தில் எப்போதும் ப்ரீதியையு டைய பிராமணராயிருத்தலால் நீர் உம்முடைய சிஷ்ய ன் படைவகுத்துநிற்கும திறத்தைக்கண்டு மகிழ்ந்து சும்மாவிருந்துவிடாமல் நம்முடைய சேனையிலுள்ள வீரர்களைக்கேளாய் என்று தெரிவிக்குநோக்கத்தாலும் 'மின்னுநூல் வேதியனே வெற்றியரை யானுரைக்

கேன் முன்னு' என்று சொன்னானென்க. பீஷ்மகர்ணாதிகளுக்கு முன்னர் 'நீ' என்று துரோணரைச் சொன்னதும், விகர்ணன் முதலானவர்களுக்குமுன்னர் அச்வத்தாமாவைச் சொன்னதும் துரோணரைத் திருப்தி செய்விக்கும்பொருட்டென்க. முன்னல்—ஆலோசித்தல். கேளிர் நிருபர்—என்றதனால் பந்துக்களாகிய பூரிச்ரவஸ் ஜயத்திரதன்முதலானவர்களைக் குறிக்கின்றது.

7. வேறும் பல சூரர்—இங்கே சல்லிய கிருதவர்மா முதலானவர்கள். மலைதல்—போர்புரிதல். 5, 6, 7 பாட்டுக்களால் துரியோதனன் தன் சேனையின் பாகுள்யத்தையும், அச்சேனைக்குத் தன் பாலுள்ள பக்தியையும், சௌர்யத்தையும், யுத்தத்திலுள்ள ஊக்கத்தையும், கௌசலத்தையும் தெரிவித்தபடி காண்க.

8. அமைவுபோதா திராசிற்கும்—அபரிமிதமாயிருக்கும். அமைந்து—பரிமிதப்பட்டு. ஸூக்ஷ்ம புத்தியுடைய பீஷ்மரால் காக்கப்படுதலால் தன்படை வெற்றியை யடையுமென்றும் சஞ்சல புத்தியையுடைய வீமனால் காக்கப்படுதலால் பாண்டவசேனை தோல்வியை யடையு மென்றும் துரியோதனன் கருதியிருந்தானென்பது இதனால் தெரிகின்றது.

9. விரும்பி—அமர்ந்து. நோக்குங்கோள்—நோக்குங்கள். 'புறப்பற்றுத் தள்ளுங்கோ ளோரவிற் ருமோதரன்பள்ளி, கொள்ளுங்கோ ளோர்மருவுங் கோள்' என்ருர் பிள்ளைப் பெருமாளையங்கார். பாங்கு-நேர்த்தி.

10. மகிழ்ந்து—மகிழ. பாண்டவசேனையிற் பக்ஷபாதமுள்ளவரென்று கருதித் துரோணரை யிகழ்ந்தும் இனந்தும் ஒரோவழி புகழ்ந்தும் வார்த்தையாடிய துரியோதனனிடத்தில் துரோணர் அலக்ஷியமாய்ப் பதிலொன்றுஞ் சொல்லாமலிருப்பதை யுணர்ந்தவராகையால் பீஷ்மர், அவ்வாறு துரோணருக்கு அலக்ஷியமுண்டாகாமலிருத்தற்பொருட்டும், தளர்ச்சியுற்ற துரியோதனனுக்குத் தைரிய முண்டாதற் பொருட்டும், துரியோதனன் இகழ்ந்தாலும் புகழ்ந்தாலும் அவன் சோற்றையுண்டதனல் அவனுக்காக யுத்தஞ் செய்ய வேண்டுவது தம் கடமை யென்றும், சேனபதியாகிய தாம் தொடங்கினலன்றித் துரோணர் முதலானோர் தொடங்க மாட்டார்களென்றுங் கருதியவராய்ச் சிங்கநாதத்தைச் செலுத்தித் தம் சங்கை முழக்கினர் என்க. தெவ்-பகைமை.

11. பணவம்—ஓர் வாத்திய விசேஷம். ஆனகம் கோமுகம் முதலியவைகளைப்பணமுதற்ரெல்லியங்கள் என்ருர். தொல் இயங்கள்-பிராசீனவாத்தியங்கள்.

12. பீஷ்ம த்ரோணாதிகள் ஆசாரியர்களானபடி யால் அவர்கள் தொடங்கிய பின்னரே தாங்கள் ஆரம் பிக்கவேண்டுமென்று பாண்டவர்கள் கருதியிருந்தார் களென்பது தோன்றவும், முந்துறப் பாண்டவர்கள் போர்புரியத் தொடங்கினார்க ளென்பதில்லாமல் துரி யோதனாதியர்கள் அறை கூவி யெழுந்ததன் பின்னரே யிவர்கள் யுத்த சந்நத்தனார்களானார்களென்பது தோன் றவும் 'ஆங்கதற்பின்' என்றாரென்க. மற்றும் பலரும் தேருடையவராயிருக்க மாதவனும் பாண்டவனும் தே ரின் மேலிருந்தார்களென்று விசேஷித்த தென்னை யெனில் இவர்களுடைய தேர் மற்றையோர்களது தேரைப் போலல்லாமல் அக்கினியால் கொடுக்கப்பட் டது எனவும் ஆகையால் பிறரால் அழிக்கப் பெறாமல் வெற்றியையே யெய்தும் எனவும் காட்டுதற்காக வென்க. அங்கமலத்து அன்னம் அதுவாம்-தாமரை யிலன்ன மென்னும்படி. மலர்க்கைகளிற் சங்கமேந் திய தோற்றம் தாமரையிலன்ன மிருந்தது போன்ற தென்க.

13. 14. ஹ்ருஷீகேசன்—இந்திரியங்களை நடத்தி யாளுவோன். ஹ்ருஷீகம்-இந்திரியம்; ஈசன்-நடத்தி யாளுபவன். இந்திரியங்கட்கு ஸ்வயமாகவே யுணர் வில்லையாதலின் அவை யசேதனங்களாம். ஆகவே,

அவை தாமாகவே யொன்றிலுஞ் செல்லமுடியா; என்றாலும், அவை ஆத்மாவினின்றும் சேதனத்தன்மை பெற்றுப் பின்பு, விஷயங்களிற் செல்லுகின்றனவாதலால், ஸர்வேந்திரிங்களையும் நடத்தியாளுபவர்-ஸர்வாந்தர்யாமியான ஸ்ரீ கிருஷ்ணபகவான் என்க. கௌரவசேனையில் ஆழியின் பேரொலிபோற் சங்கு முழங்கின என்னுமளவே கூறி யிங்கே தனித்தனி சங்கங்களின் பெயர் சொல்லத் தொடங்கியதால் கௌரவர் சேனையிற் சங்க முழக்கம் வெற்றொலியாமென்பதும் பாண்டவர்களது சஙகங்கள் திவ்யாயுதங்களாமென்பதும் பெறப்பட்டமையறிக. திக்விஜயஞ்செய்து பல அரசர்களை வென்று விசேஷமான தனத்தைப் பெற்று வந்தவன் என்னும் பொருளுள்ள 'தனஞ்சயன்' என்னும் பெயரைப் பிரயோகித்ததால் அர்ஜுனன் ஒருவராலும் வெல்லத்தக்கவனல்லன் என்பது பெறப்படும். பணவம் இங்கே சங்கம். இடிம்பவதாதிகளைச் செய்தவனுகையால் வீமனை 'யோடாவிறல் வீமன்' என்றார். ஓடாவிறல் வீமன் என்பதற்கு நீங்காத வலியையுடைய வீமனென்றாவது யுத்தத்தில் பின்வாங்காத வலியையுடைய வீமனென்றாவது கொள்க. மிகுந்த உணவையுட்கொண்டு பருத்துப் பெருந்திறல் படைத்தோனென்பார் விறல் வீமனென்றொன்னலுமாம். எப்போதும் தர்மசிந்தை யுடையவராகை

யால் யுதிஷ்டிரருக்குச் 'சேடார்ந்த' என்னும் விசேஷ ணங் கொடுக்கப்பட்டது. சேடு-பெருமை; நன்மையு மாம். குந்தி விசேஷமான தவம் புரிந்து தர்ம தேவ னுக்குப் பெற்ற புதல்வராகையால் 'அந்தருமன் மைந் தன்' என்றார். மைந்தன்—வலிமையையுடையோன். அனந்த விஜயமென்னும் சங்கத்தையுடையவ ரென்ற தால் அழிவில்லாத ஜயத்தோடுகூடியவரென்றும்,இந்த யுத்தத்தில் இவருக்கு முடிவில்லையென்றுந் தோன்று மாறு உய்த்துணர்க. நந்து-சங்கம். பாடு-ஓசை, 'பா டின் படுமணி யிரட்டவொருகை' என்னுந் திருமுருகா ற்றுப்படையில் பாடு-ஓசை யென்னும் பொருளில் வரு தலை யறிக. பாரப்பணிலம்-மகாசங்கம்.

15. துங்கப்பரி—உத்தமமான குதிரைகள். துங் கம், நகுலனுக்கு விசேஷணமுமாம். நகுலன் குதிரைப் படைக்குத் தலைவனாகையால் 'துங்கப்பரிநகுலன்' என்றார். மணிபுஷ்பகம்—இது சகதேவன் சங்கத்தின் பெயர். கௌரவசேனையில் தலைவரான பீஷ்மர் பிரத மத்தில் சங்கூதினார் என்கிற முறையில் பாண்டவ சேனையில் திருஷ்டத்யும்நன் ஊதினானென்னுமல் இரு டீகேசன் முழக்கினான் என்றார் பகவானைமுன்னிட்டுத் தாங்கள் அமர் தொடங்கவேண்டுமென்றிருந்த பாண் டவர்கொள்கையை யறிவித்தற்கென்க. அர்ஜுனன்

பகவதம்சமுடையவனுகையால் பகவானுக்குப் பின்னரும், பராக்கிரமத்தில் அர்ஜுனனுக்கு அடுத்தபடியில் நிற்பவனுகையால் பீமன் அர்ஜுனருக்குப் பின்னரும், வேந்தராகையால் தர்மபுத்திரர் வீமனுக்குப்பின்னரும், தமையன்மார்கள் சென்ற நெறியில் தாமும் போகவேண்டுமென்ற கொள்கையினராகையால் நகுலசகதேவர்கள் தருமபுத்திரருக்குப் பின்னரும் ஊதினர்களென்றுரெனக. 'ஒக்கவெடுத் தூதினன்' என்பது நகுலஸகாதேவர்கள் தமக்கெனவோர் விருப்பமுமில்லாமல் தமயன்மார்கள் சென்ற நெறியே செல்லுமவர்களென்பதை வலியுறுத்திக்காட்டுமாறு காண்க.

17. அக்கடியபேரரவம் என்றது மேற்கூறியபாஞ்சசனியம் தேவதத்தம்முதலிய திவ்யமான சங்கங்களின் தொனியை. இந்தச்சங்கங்களின் பேரரவமே மற்றையோருடைய சங்கத்வனிகளோடு சேர்ந்து திருதராஷ்டிரபுத்திரர்களின் மனத்தைப்பிளந்தது என்பார் 'தொக்கெழுந்து தீரச்சிதைத்ததே' என்றார். சிக்கென—தீவிரமாக.

18. கௌரவர்களின் சிந்தையழிவைக்கூறிய ஸஞ்சயர் இப்பாசுரத்தால் பாண்டவர்களின் மனவெழுச்சியைக் கூறுகின்றுரெனக. சங்கமுழக்கத்தைக்கேட்டும் ஓடாமல் எதிர்த்துநின்று சஸ்திரங்களைவிடுத்துப் போர்

தொடங்கினார்களென்பார். 'போர்முகத்தில்' என்றும், அதுகண்டு அர்ஜுனன் வில்லை வாங்கினான் என்பார் 'கார்முகத்தைவாங்கி' யென்றும், மகாவீரனும், ஜயப்பிரதனும், பயநாசகனுமான ஹநுமான் துவஜரூபமாக வந்து அனுக்கிரகித்ததால் அர்ஜுனன் எவ்விதத்தும் பயமில்லாதவனென்பார் 'கவித்துவசன்' என்றும், கூறினரென்க. கார்முகத்தை வளைத்தானென்றதும் அம்பைத்தொடுத்தான் என்னாமல் கண்ணனைநோக்கிச் சிலவுரைத்தானென்றதனால் அர்ஜுனன் நீதிமான் என்பதும், எதையும் பெரியோர்களிடம் ஆராய்ந்தே செய்பவனென்பதும், அதனால் ஜயம் அவன்பக்கந்தானென்பதும், உன்னைப்போல நீதிதவறியாராயாமல் பிரவர்த்தித்துத் தோல்வியடையானென்பதும் கூறியவாறு காண்க. கார்முகம்—வில். வாங்கி-வளைத்து. பார்முகத்து நிறுத்து என அந்வயிக்க. எல்லார்தேருமழிவுறுகிற்க என் தேரை எக்காலத்தும் வெற்றியுண்டாக நிலைபெறச்செய் என்பான் 'நிறுத்து' என்றும் அச்சுதனுகையால் இதுசெய்கை யுனக்கு அசாத்தியமன்றென்பான் 'நீ' யென்றும் சொன்னானென்க.

20. அர்ஜுனன் ஸ்திரீகள்போலச் சோகமுதலியவைகட்குட்படலானானென்பதை யறிந்தவராகையால் 'பார்த்த' என்றும் யான் ஸாரத்தியம்பண்ணும்போது

நீ ஒன்றுக்கும் பயப்படவேண்டாம், யாவரையும் பார் என்பார் 'பல்குருக்களீட்டம் பார்' என்றும் பகவானருளிச் செய்தாரென்க. பார்த்தன்-பிருதை(குந்தி) யின் புத்திரன்.

21. மாமடிகள் —மாமனர்.

22. கவுந்தேயன்-குந்திபுத்திரன். ஸ்திரீகள் போன்று பேதைமையுடையனுக விருத்தல்பற்றி முன்னர்ப் பார்த்தன் என்றதுபோல இங்கும் கவுந்தேயன் என்கிறர். தன் பக்கத்தில் இரக்கமுற்றவனுயிருந்த கவுந்தேயன் இப்போது சத்துருபக்ஷத்திலும் இரக்கங் கொண்டானென்பது தோன்றப் 'பேரிரக்கமேவி' யென்றார். மேவலர்-பகைவர்.

23. குன்றி-குறைந்து. ரோமாஞ்சம்-மயிர்க்குச்செறிதல். குழைய-தளர.

24. நிமித்தம்-சகுனம்.

25. தமர்-சுற்றத்தார். சமரம்-யுத்தபூமி. விசையம்-வெற்றி. யோகத்தோடு கூடிய ஸந்யாசியும் ரணகளத்தில் எதிர்த்து நின்று போர்புரிந்து கொல்லப்பட்டவனுமாகிய இவ்விருவருமே சூரிய மண்டலத்தைப் பிளந்து கொண்டு சுவர்க்கத்தை யடைகின்றார்களென்று

சுருதி ஸ்மிருதி முதலியவைகளிற் சொல்லியிருக்கின்றது. யுத்தத்தில் கொல்பவனுக்கு யாதும் பயனில்லை. அப்படியிருக்கத் தமர்களைக்கொன்று யான் அடையும் பயன் யாது என்பான் 'தன் றமரைக்கொன்று ..சேரு நன்மைதனை யொன்றும் நான்வேண்டேன்' என்றானென்க.

26. அத்தித்தோம்-விரும்பினோம். வித்தம்-பொருள்.

28. 'அந்தன் புதல்வர்களை' யென்னுமிடத்தில் 'அந்தகன் பிள்ளைகளை' யென்றும் பிரதியிற் காணப்படுகிறது. அதற்கும் இதுவே பொருளென்க. 'உகப்பேயுயர்வு' என்றதால் உகப்பு என்பதற்கு மிக்க மகிழ்ச்சியென்று பொருள் கொள்க.

29. தீவைப்பார், விஷமிடுவார், ஆயுதத்தாற்கொலைசெய்வார், நிலத்தை யபகரிப்பார், வழிப்பறி செய்வார், பிறனில்லாளைக் காதலித்துச் செல்வார் என்ற இந்தவறுவரும் கொடும்பாவிகளாதலால் இந்தவறுவகைக்கொடுஞ் செயலுமுள்ள துர்யோதனதியர்களைப் 'பாவிகளாமற்றிவரை' யென்றான்.. லக்ஷ்மீ பதியாயிருந்தும் இந்த அலக்ஷ்மீகரமான (அமங்களமான) காரியத்தில் என்னை யேவுதல் செய்யலாமோ என்

பான் மாதவனே என்றனெனக். மாதவன்-லக்ஷ்மீ பதி.

30. கோத-குற்றம். காதுதல-கொல்லுதல். எதிலர்-பகைவர்.

33. வை கூர்மை. ஓவா-நீங்காத.

34. துன்று சோகம்-மிக்க சோகம். இந்த இடத்தில் சென்ற சோகத்தால் என்னும் பாடமுங் காணப்படுகின்றது. அதற்குத் துன்பத்தோடு கூடிய சோகம் எனப்பொருள் கொள்க. செல்லல்-துன்பம். பொகட்டு-எறிந்து.

---

## அத்யாயம்—2.

## ஸாங்க்ய யோகம்.

முக்தி பெறுதற்கு ஓர் வழியான ஸாங்க்யமாகிய யோகத்தைக் கூறுவது ஸாங்க்யயோகமாம். ஸாங்க்யம்-உண்மைப்பொருளின் ஆராய்ச்சி. யோகம்—வழி உபாயம், ஸாதனம். உண்மைப் பொருளை யுணர்ந்த

லன்றி விஷாதமும் நீங்காதாதலின் இவ்வத்யாயம் அர்ஜுன விஷாதயோகத்தின் பின் வைக்கப்பட்டது. 'ஆத்மாவை யறிபவன் சோகத்தைக் கடந்து நிற்கிறான்' என்னுஞ் சுருதியை நோக்கிக் கொள்க.

காலி—பசுக்கள். பொன்றாமை—அழியாமை.

1. கலுழி—அருவி. மதுசூதனன்—மது என்னும் அசுரனைக் கொன்றவன்—கிருஷ்ணபகவான்.

2. மோக்ஷ இச்சையாலாவது சுவர்க்க இச்சையாலாவது கீர்த்தி யிச்சையாலாவது ஒருவன் ஒன்றைச செய்யக் கூடும். இவை இம்மூன்றுக்கும் இடமில்லையாகையால் உனக்கு ஏதுபற்றி இக்கலக்கம் உண்டாயிற்றென்பார் 'எத்தாலே' என்கிறார். 'சத்தானோர் சாராது' என்பதனால் முமுக்ஷுக்கள் இச்சைகொள்ளக் கூடியதன்றென்பதும், 'மேலுலகமில்லை'யென்பதனால் சுவர்க்கப்பிராப்தம் அன்றென்பதும், 'மிகுபழியாம்' என்பதனால் கீர்த்தியைத் தரத்தக்கதன்றென்பதும் தெரிவித்தவாறு காண்க.

3. அலித்தனம்—நபும்ஸகத்தன்மை. எய்துதல்—அடைதல். கிராதவடிவமெடுத்துவந்த மகேசுவரனோடு போர்புரிந்த ஆண்மகனை உன்பால் இது சேரத்தக்க

தன்றென்பார் 'ஈதுன்பால் வந்தடைவு நல்லகாண் மன்னவனே' என்றார் என்க.

4. அண்ணல்—பெருமையுடையோன். பொருவது—யுத்தஞ்செய்வது.

5. இரப்பி லெழுப்படுத னன்றே யெனக்கூட்டுக. இரப்பு—பிக்ஷையெடுத்தல். குருதி—ரக்தம்.

6. சீரிது—ஸ்ரேஷ்டமானது.

7. கார்ப்பணியம்—க்ருபணகுணம். ஓர்ப்பதிலேன்—அறிவில்லேன். சாதி—சிக்ஷைசெய். உனைச்சார்ந்து தாழ்ந்தேனை யெனக்கூட்டுக.

8. எதிரற்று—சத்துருக்களின்றி. அமரர்நாயகம்-தேவர்களுடைய ஆதிபத்யம. ஞாலம்—உலகம். எல்லைப்பொருள்—ஸ்ரேயஸ்ஸான பொருள்.

9. குடாகேசன்—சோம்பலை யடிமையாக்கி யாளுவோன்; தான் கருதியது செய்யுங்கால் சோம்புதலில்லாது எப்போதும் மிக்க ஊக்கத்தோடு ஸாவதானனாயிருப்பவன் என்க. குடாகா—சோம்பல். ஈசன்—அடிமையாக்கியாளுவோன்.

10. முறுவலித்தல்—நகைசெய்தல். காரணமா—காரணமாக.

13. உயிர்—ஆத்மா. கௌமாரம்— பால்யாவஸ்தை. யௌவனம்—மத்தியாவஸ்தை. மூப்பு—கிழத்தனம். மருவுதல்—சேருதல்.

14. தன்மாத்திரை—இந்திரியங்கள். தீண்டல்—ஸ்பர்சித்தல். சீதம்—சீதளம். அழல்—உஷ்ணம். என்மாச சுக துக்கம்—என்கின்ற பெரிய சுகதுக்கத்தை. எய்துவிக்கும்-அடைவிக்கும்.

15. ஒத்தசுகதுக்கன்-சுகத்தினிடத்திலும துக்கத்தினிடத்திலும் சமமான புத்தியையுடையவன். தீரன்-பண்டிதன். ஈடழியா-பீடிக்கமாட்டா. ஆணேறும் பார்த்தனே-புருஷ சிரேஷ்டனை பார்த்தனே. "ஆற்றலொடு புணர்ந்த வாண்பாற் கெல்லா—மேற்றைக் கிளவி யுரித்தென மொழிப." என்னும் ஸூத்திரத்தால் ஏறு என்பதன் பொருளை யுணர்க. ஒங்கு அமுதத்தன்மை-மிக்க அம்ருதத்வமாகிற மோக்ஷ ஸுகம்.

16. அசத்து-இல்லாதது. சத்து-உள்ளது. இல்லாததுக்கு-அஸத்துக்கு. உண்மைக்கு—ஸத்துக்கு. உண்மைக்கு இல்லாதது இல்லையெனக் கூட்டுக. ஈறு-முடி

வான நிச்சயம். தத்துவம்-உண்மை.

17. ஊனம்-நாசம். யாப்புற்றது-வியாபிக்கப்பட்டது.

18. மன்னும்-நித்தியமாயுள்ள. சரீரி-ஆத்மா. அந்தமுடைய-நாசமுடையன.

19. கொல்லுண்ணான்-கொல்லப்படான். அறியும்-அறிவான். "பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மையிற்—செல்லா தாகுஞ் செய்யுமென் முற்றே" என்பவாகலின் இங்கே 'அறியும்' என்பது படர்க்கை யாண்பாலில் வந்தது.

22. பீறும்-கிழிந்துபோன. புடைவை-வஸ்திரம் முத்துடம்பு-முதிய உடம்பு; கிழத்தனங்கொண்ட உடம்பு. புத்துடம்பு-புதிய உடம்பு.

23. சேதியா-வெட்டமாட்டா. மாருதம்-காற்று.

24. தாணு-ஸ்தாணு. சலிக்காத இயல்புடையவன். ஆதும்-யாதும். யாக்கை, யாறு, யானை என்பன. ஆக்கை, ஆறு, ஆனை என வருவனபோல வந்ததெனக் கொள்க. துயரேல்—துக்கியாதே.

25. இங்ஙன்—இப்படியாக.

26. அறுதி—நிச்சயம்.

27. இடர்-துன்பம். உன் தருமம் என்றது க்ஷத்திரிய தர்மத்தை, பார்த்திபர்-க்ஷத்திரியர்கள். தகைமையது-புகழுடையது.

30. வான் ஏறும் வாயில்-ஸ்வர்க்கத்துவாரம்.

31. புகழ் உன் அறம்-புகழும், உன் தர்மமும். போயிற்றால் என்னும் ஒருமை வினையைத் தனித்தனி புகழிற்கும் அறத்திற்கும் முடிக்குஞ் சொல்லாக்கிக் கொள்க. ஏவம்-பழிச்சொல். "ஏவமோ வெமக்கென்றிசைப்பார் சிலர்" "ஏவம் பாராய்" என வருதல் காண்க.

32. கொண்டாட்டேற்றார்க்கு-கவுரவிக்கப் பட்டார்க்கு. பழி சாமதனிற் கொடிது—அபகீர்த்தி சாவைக் காட்டிலும் கொடிது.

33. ஒன்னாதார்-பகைவர். ஒன்றாதார் என்பது ஒன்னாதா ரென்று மருவிற்று. ஒன்றுதல்—சேர்தல். இங்கே ஒன்னாதா ரென்றது துர்யோதனாதிகளை. சொல்-புகழ்.

34. மேதினி-பூமி.

35. பேறு இழவு-லாப நஷ்டம். 'சயாசயங்கள்-வெற்றி தோல்வி.

36. வினைக்கட்டு—கர்மபந்தம்.

37. குன்றுது-அழியாது. அவம்-தோஷம். ஒன்றுகும்-ஒரேவிதமாம். அத்திரந் தீர்வில்லவர்-நிச்சயமில்லாதவர்.

38. பூத்தவுரை-புஷ்பமாத்ர பலம்போல விருக்கிற வார்த்தை.

41. மன்னேல்-பொருந்தாதே. யோகக்கேமட-யோகக்ஷேமம்.

42. தடம்-தடாகம். அந்தணன்-வேதாந்தத்தையணவுவோன்; பிராஹ்மணன்.

43. அணுமன்றுத-சிறிதும் பற்றுத. வெற்றமைவில்-செய்யாதிருப்பதில்.

44. பேறு இழவு-(பல) விர்த்தியிலும் அவிர்த்தியிலும். ஒத்தல்-ஸமத்வம். ஓர்ந்து-அறிந்து.

45. தூர அவரம்—மிகவும் இழிவானது.

46. சிறப்பு—கௌசலம்.

47. சிறப்பு—பதவி.

48. கேதம்—வெறுப்பு.

50. நின்ற-ஸமாதியில் நின்ற. பிறிவு-பிரிவு. உறை யாய் என்பதை உரையாயெனத்திருத்திக்கொள்க.

51. திண்ணறிவன்-ஸ்திதப்ரஜ்ஞன்; உறுதியான அறிவையுடையவன்.

52. துளங்கா-கலங்காத. வன்பு-உறுதி.

53. எங்கும்-எல்லா வஸ்துக்களிலும். உகப்பு-கொண்டாடுகை. வெறுப்பு-த்வேஷிக்கை.

55. சங்கம்-ரஸம்; ஆசை. பரமாகுஞ்சீருயிர்-பரனை ஆத்மா.

56. மொய்ம்பு-பலம். நவையின்று-குற்றமின்றி.

57. உள்ளும்-சிந்தித்திருக்கின்ற. சங்கம்-பற்று. பொன்றும்மிருதி-நினைவுகெடும். மிருதி-ஸ்மிருதி.

58. ஆசு-விரைவில்.

61. யாதுவுலகர்-கெடும் என்னுது ஓடும் என்ற இலேசால் கெடாது உடம்படு மெய்பெறுதலுமுண்டெனக்கொள்க. "தன்முக மாகத் தானழைப் பதுவே" என்பதுங் காண்க.

62. கரக்கும்-உள்ளே பிரவேசிக்கும். ஏமம்-சாந்தி.

64. அந்தகாலம்-அந்த்யகாலம். சந்தம்-அழகு.

## அத்யாயம் 3.

1. ஏவுதி-ஏவுகின்றாய். சூதார்ந்த-கலப்பான.

3. இறைப்பொழுதும்-க்ஷணகாலமும்.

4. கட்டி-அடக்கி. பொருள்-புலனின் விஷயங்கள். பொய்ம்மையினன்-பொய்யாசாரக்காரன்.

5. தொத்தற்றான்-பற்றற்றவன்.

6. நியதக்கருமம்-(நித்திய நைமித்திகாதி) கர்மம். அறிவில்-ஞானயோகத்தைக் காட்டிலும். ஏற்றமுடைத்து-சிரேஷ்டமானது. உடல் நடப்பு-சரீர யாத்

திரை; (ஞான ஸம்பாதனத்துக்கு உபயோகமான) தேக தாரணம். ஓடாது-விருத்திக்க மாட்டாது.

7. ஆங்கதனுக்காக-அந்த யக்ஞாதிகளுக்காக.

8. வேதா-பிரஜாபதி; பரமாத்மா.

9. இறைஞ்சிடுமின்-ஆராதியுங்கள். மறுமை-மோக்ஷம்.

10. வளம்-போகம். அமரர்-தேவர்.

11. மிக்கதனை-மிகுதியை; சேஷத்தை. ஊழ்வினை-ஜன்மாந்தர பாவம்.

12. பூதங்கள்-பிராணிகள். மாரியால்-மழையால். காரியமதால்-கர்மத்தால்.

13. காயம்-சரீரம்.

14. மேவலுறுன்-பிரவர்த்தியான். பழுதே-வியர்த்தமாய். பொறிப்பட்டு-இந்திரியங்களால் ரமித்துக்கொண்டு.

15. ஒன்றில்லை-ஒருலாபமும் இல்லை. செய்யாத்ததாலில்லை-செய்யாததினுலொரு கேடுமில்லை. வையத்து-பூமியில். ஆதும்-யாதும்.

16. பற்றற்று-ஒட்டாமலிருந்துகொண்டு.

17. மன்னினர்-அடைந்தார்கள். உலகம் இசை வகையும்-ஜனங்களுக்கு (தர்மப் பிரவர்த்தன ரூபமான) அனுக்கிரகமும்.

18. மேலொருவன்-சிரேஷ்ட புருஷன். அளகம்-ப்ரமாணம். ஆதை-அதனை.

19. நின்று இயல்வன்-நின்று அனுஷ்டிக்கிறேன்.

20. மாயும்-நசித்துப்போம். மரபு-குலம். உய்த்தல்-செலுத்துதல்.

21. இசைவுசெய்க-பிரீதிபண்ணக்கடவன்.

22. உன்னும்-நினைப்பான்.

23. அசைவுசெய்யார்-சலிப்பிப்பாரல்லர். இது செய்யான் என்றிருத்தல் வேண்டும். செய்யார் எனப் பிரதியில் இருந்தவாறே பதிப்பிக்கப்பட்டது. மரியாதைப் பன்மையாக் கொள்ளுதலுமாம்.

24. இனிதிருத்தி-ஸமர்ப்பித்து. மமதை-மமகாரம்.

25. எவர்-எவர். என் மதத்தை-எனது இந்த ஸித்தாந்தத்தை.

26. நூலுரைப்பது-சாஸ்திரஞ் சொல்லும் நிர்ப்பந்தம்.

27. தீங்கு அமைக்கும்-விரோதத்தைச் செய்யும்.

28. மற்றையதில்-பரதர்மமான ஞானத்தைக்காட்டிலும்.

29. வன்பதனில்-வலுவில். ஏவுற்றான்போல-ஏவப்பட்டவன்போல. ஆவுற்றான்-கோபாலன்.

30. வைரி-விரோதி.

31. உற்பம்-உல்பம்; கருப்பப்பை. அங்கி-நெருப்பு. தூமம்-புகை.

32. அமையா-திர்ப்தியடையாத. பொல்லாங்கு-விரோதம்.

33. மன்னறிவு-ஆத்மஞானம்.

34. பாதா-பரதவம்சச் சிரேஷ்டனே! காதி-அடக்கி. கட்டழித்து-போக்கடித்து. ஆவத்து-ஆபத்து. "ஆவத்தின் வந்தபய மென்றானை" என்றார் கல்வியிற் பெரியாரும்.

35. பரம்-பிரதானம்.

36. சேமம்-க்ஷேமம். வன்பகை-ஐயிக்கவரியபகை நீத்தல்-ஒழித்தல்.

---

## அத்யாயம் 4.

1. இந்தயோகம்-கர்மயோகம். இரவி—சூரியன் இக்குவாகு-இக்ஷ்வாகு.

2. எய்ந்ததனை-பொருந்திவந்ததனை. அரைச முனிவர்—ராஜரிஷிகள். கைகழிந்துவிட்டது-அற்றுப்போயிற்று.

3. ஏதம்அற-குற்றம்நீங்க. மறைப்பொருள்-ரஹஸ்யம்.

4. ஆதித்தன்-சூரியன். விசயன்உரைக்க எனக் கூட்டுக.

6. மெய்த்தன்மை-ஸ்வரூபம். எய்தி-பொருந்தி. இறை-ஈசுவரன்.

7. மறம்-வன்மை. வெந்நைத் தருவிக்கும் வில் விசயா-பகையரசர்கள் முதுகுகாட்டி யோடும்படி செய்கின்ற வில்லையுடைய அர்ஜுனனே.

8. நல்லார்கள்-ஸாதுக்கள். முந்தைஅறம்நாட்ட-பிராசீன தர்மங்களை ஸ்தாபிக்க. உகம்-யுகம்.

9. எதிர்ப்பிறவி-புனர்ஜன்மம். எலாது-அடையாமல்.

10. பூதராய்-பரிசுத்தராய். வெகுளி - க்ரோதம. அறிவாந்தவம்-ஞானதபஸ்.

12. தாங்கிநின்று-ஆராதித்துக்கொண்டு. அஞ்சாநிற்பர்-ஸம்ஸாரதுக்கத்திற்குப் பயப்படாமலிருப்பார்கள். அஞ்சாநிற்பர் என்பதை ஸ்ரீராமாநுஜ பாஷ்யத்தின் கருத்தையனுசரிக்கப்புதிதாகச் சேர்த்தனரென்க. தாங்கி யிறைஞ்சாநிற்பர் என்றிருப்பின் மூலபாடத்தை யொத்ததாகும். தாழாது-தாமதியாமல்; சீக்கிரமாக.

13. வண்ணங்கள் நாலும்-நான்கு வர்ணங்களும். வகுத்தல்—பிரித்தல். மற்றது செய்யேனு-மற்றதனைச் செய்யாதவனுக. வெறு-மனத்திற்பொருந்து. "உரைசெல வெறுத்தவவன் மூதூர் மாலை" என்னுமிடத்து

வெறு—என்பது பொருந்துதலென்னும் பொருளிற் பயின்றுவருதலை யறிக.

14. இழிசா-பற்றமாட்டார். இழிசுதல்-பூசுதல்.

15. இன்னே-இப்படியாக. வீடெய்த முயல்வோர்-முமூக்ஷுக்கள். தொல்லையார்-முன்னோர்கள். ஒல்லையாய்-சீக்கிரமாய். சக்தியுடையையாய்க்கொண்டு என்றுரைத்தலுமாம்.

16. மோகிப்பர்-மயக்கமடைவர். உரைக்கேன்-சொல்லுவேன்.

17. விவிதம்-பலவிதம்.

19. பொறி-தீப்பொறி.

20. அதொன்றும்—"முற்றுமற்றொரோவழி" என்பதனால் உகரங்கெட்டுப் புணர்ந்ததென்க.

21. அமைந்த-அடங்கிய. இரு-ஈரு என நீட்டலாயிற்று.

22. பொறுமை - அஸூயை. பிணிப்புண்ணான் - கட்டுப்படான்.

24. அவிஸ்-ஹவிஸ்.

25. எச்சம்-யஜ்ஞம். பிரமமாம் அங்கி-பிர்ஹ்ம ஸ்வ ரூபமான அக்னி. எச்சவுறுப்பு-யக்ஞத்தின் உபகர ணங்கள்.

26. ஆன்றமைதலாமனலில் - அடக்குவதென்கிற அக்னியில். ஓம்ப்பர்-யாகஞ்செய்வார்.

27. இயல்வு-செயல்கள்.

28. பொருளெச்சம்-த்ரவ்ய யக்ஞம். தவவெச்சம்-தபோ யக்ஞம். தெருள்-தெளிவு. மருள்-கலக்கம்.

31. எச்சமிச்சம்-யக்ஞத்தில் மிகுந்தது. அமுதூண் விரும்புவார்-அமிர்த ஸமமாகப் புஜிக்கலை விரும்பு மவர். ஓங்குபிரமம்-ஸநாதன பிர்ஹ்மம். இவ்வுலகமில்-இந்த லோகத்தில் தர்மாதி புருஷார்த்தங்களில்லை. அவ்வுலக மத்தால்—என்றிருப்பதை அவ்வுலக மெத்தா லெனத் திருத்திக்கொள்க.

33. எச்சத்தின்-யக்ஞத்தைக்காட்டிலும். போதம்-ஞான யக்ஞம். மிகும்-சிரேஷ்டமாகும்.

34. இப்பாசுரத்தின் மூன்றுமடியை யொத்துப

தேசிப்-பருனக்-குணர்ந்தோராய் என வரையறை செய்து வெண்பா விலக்கணத்திற்கு ஏற்குமாறுகொள்க. இவ்வாறு கொள்ளுதல் ஆசிரியரின் ரீதிக்கு விரோதமெனக் கண்டு யாம் மேற்கூறியவாறு சீர் பிரித்திலம். நம்மிடமுள்ளபிரதியில்ஒத்தபதே-சிப்ப-ருனக்கு-வுணர்ந்தோராய் என்றுங் காணப்படுகின்றது. ஏற்றவாறு கொள்க.

35. மோகியா யாததனை என்பதனை மோகியாய் யாததனை எனத் திருத்திக்கொள்க.

37. அறிவு-ஞானக்னி. மெய்யறிவில்-மெய்யறிவை யொப்ப. பைய-காலக்கிரமத்தில்.

38. ஆதரவு-சிரத்தை.

39. மயக்கஞ் செறிவான்-ஸம்சயம் மிக்கவன்.

40. நெஞ்சந்தனை யென்பதை நெஞ்சன்றனை யெனத் திருத்திக்கொள்க.

41. புகர்-நிறம். புகருடையவாளென்க.

## அத்யாயம் 5.

1. கர்மவிடுமறிவும்-கர்மஸந்யாஸ ஞானத்தையும். இருமையிலும்-வீடு பற்றுக்களி ரண்டிலும். இருமையிங்கே யிரண்டென்னும் பொருட்டாய் நின்றது. "மும்மைசா லுலகம்" என்பதிற்போல.

2. தக்கநலம்-புருஷார்த்தம். அக்கருமம் விட்டியல் தன்னின்-அக்கர்ம ஸந்யாஸ ரூபமான யோகத்தைக் காட்டிலும்.

6. அரிதாகுமெனவும் பாடபேதம். கருமங்கூடாமல் எய்தவரிதாகு மெனக்கூட்டுக.

8. காட்சி முதலைந்து-கண்டு, கேட்டு, உற்று, மோந்து, உண்டு அறிதலாம் ஐந்தொழில்க. கண்டுயிலுயிர்த்தல்-கண்துயிலு (தூங்கு) தலும் கண்விழித்தலும். நான் இயலேன்-நான் செய்யேன்.

9. பதுமத்திலே-தாமரையிலே.

11. தாமத்தால்-கயிற்றால். கட்டுண்ணும்-கட்டுப்படுவான்.

12. புரம்-பட்டணம்.

13. *தத்துவமா நின்றவுயிர்-தன் ஸ்வரூபமாத்திர மாயிருக்கிற ஜீவன். செய்யானேர் நடக்கு மென்பதை, செய்யானேர் நடக்குமெனத் திருத்திக்கொள்க. ஒன்றிய முன் வாதனையால்-பொருந்திய அநாதியான பிரகிருதி வாஸனையால். வாஸனை-வாதனையென்றாயிற்று. மாஸம்-மாதமென்றானாற்போல.*

14. *ஒருவன் தீவினையும் நல்வினையும்-இஷ்டனுடைய பாபத்தையும் அனிஷ்டனுடைய புண்ணியத்தையும். பெரியோன்-விபுவான ஆத்மாவானவன், வாகும்பண்பிலன்-போக்குந் தன்மையில்லன். இஷ்டானிஷ்ட விபாகமில்லாததால் 'பாங்கினில்' என்றார். பண்பினல்—என்பதனைப் பண்பிலனலெனத்திருத்திக் கொள்க. அறிவு-ஸ்வரூப விஷயஞானம். மாயவினையால்-அஞ்ஞான ரூபமான கர்மாதிகளால். மறைந்தன்று-மறைக்கப்பட்டுள்ளது. மறைந்தன்று என்பதில் அன் சாரியை. "ஓதலிற்சிறந்தன்று ஒழுக்கமுடைமை" "வந்தன்றுகார்" என வருவனவற்றிலுங் காண்க. மறைந்தன்றியென்பதை மறைந்தன்று எனத் திருத்திக் கொள்க. உயிர்களவை மோகத்திலாய எனக்கூட்டுக.*

15. *மயர்வு-அஞ்ஞானம். பேரறிவு-பரமான ஞானம். பகலவனில்-சூரிய பிரகாசம்போல. பீடுடைத்*

தாய்-பெருமையுடைத்தாய்.

16. நிலைமை-நிஷ்டை. ஈடழித்தல்-போக்குதல். மீளாவகையுடைய மெய்ப்பயன்-திரும்பிவருந் தன்மையில்லாத ஆத்ம பிராப்தியான பலன். நண்ணுவர்-அடைவர். நண்ணுவரேன் என்றிருப்பதை நண்ணுவரேயென்று திருத்திக்கொள்க.

17. ஆன்றுணர்ந்த அந்தணன்-வித்யையாலும், விநயத்தாலும் ஸம்பன்னனான பிராமணன். ஆ-பசு. அத்தி-அஸ்தி; யானை.

18. பிறவிச்சங்கம்-ஸம்ஸாரஸங்கம். இவரால்-இவ்வுலகத்துள்ளவரால். ஒப்பில்-ஸாம்யத்தில். தீதிலா ஒத்தவுயிர்-நிர்த்தோஷமாய் ஸமமாயிருக்கிற ஆத்மா.

19. முன்பயிலு மோகம்-தேகாத்மாபிமானமாகிற மோகம். இறையை - பிர்ஹ்மாத்மக ஸ்வரூபத்தை. போகம்-அனுபவம்.

20. புறம்பயிலும் தொத்தற்ற புந்தியன்-பாஹ்யமான விஷயஸ்பர்சங்களில் தங்காத நெஞ்சையுடையவன். அந்தமிலாது ஆரும் சுகம் அடையும்-அழிவில்லாமல் அந்த பிர்ஹ்மானுபவ சுகத்தை அடையாநிற்பன்.

21. புலன்சேர் பொறியில்வரும் போகங்கள்-விஷயத்துக்கும் இந்திரியத்திற்குமுண்டான ஸம்பந்தத்தால் வருகின்ற போகங்கள். நிறைஞானவான்-பூர்ணபண்டிதன். அற்பம்-சிறிதும்.

22. காயம் கழிப்பதற்குமுன்னில்-சரீரத்தை விடுவதற்குமுன்னே. இவை-இவைகளினுடைய. யோகி-ஆத்ம ஞானத்திலே யுக்தன். போகம் — ஸுகம். 'இஹைவ' என்னும் கீதவாக்கியத்திற்கு ஸ்ரீராமாநுஜர் சாதன அனுஷ்டான தசையிலேயே யெனப் பொருள் செய்திருப்பதை யனுசரித்து இந் நூலாசிரியரும் 'இக் காலத்தே' யென் றமைத்திருக்கலாமென்று தோன்றுகிறது. இங்ஙனமாயின் 'முன்னிலிக் காலத்தே' யெனப் பாடங்கொள்க. 'முன்னிலிலிக் காலத்தே யென்று ஏட்டுப்பிரதியிற்கண்டவாறே பதிப்பிக்கப்பட்டது. இதற்கு நேரான பொருள் விளங்கவில்லை.

23. தன்னுள் அமர் இன்பம்-ஆநந்தமான ஆத்ம விஷய ஸுகம். தன் னிழலிற் றன்மகிழ்வோன்-(உத்யானத்திலே யிருந்தாற்போல)போகநிழலின்கீழிருந்து மகிழ்ச்சியை யடைவோன்.

24. நீடு இன்பம் பூண்டவர்- நீடிய இன்பத்தைச் செய்யும் விஷயத்தில் ஆஸக்தியை யுடையவர். எஞ்சா-

கல்மஷங்கள் க்ஷீணிக்கப்பெற்று. எஞ்சா-செய்யாவென்னும் வாய்பாட்டு வினையெச்சம்.

25. நீளாகும்-அபிவிர்த்தியடையும். நீள்-முதனிலைத் தொழிற்பெயர்.

26. புறப்பற்று-பாஹ்ய விஷயாநுபவம். இருகால்-பிராண அபானங்கள். நிறுத்து-ஸமகதியாகச்செய்து. வென்ற பய வெகுளியானவன் - வெல்லப்பட்டிருக்கிற பய க்ரோதங்களையுடையவன்.

27. கொள்வோனாய் ஆகி உறவாமெனை யெனக் கூட்டுக. கொள்வோன்-அநுபவிப்பவன். சாந்தி-பரமானந்தம். அனைத்துலகும் ஆள்வினையனாகி ஸர்வலோகத்தையும் ஆள்பவனாகி.

## அத்யாயம் 6.

1. நல் அங்கி-யதார்த்தமான அக்னி. கிரிசை-கர்மங்கள். இகழான்-கைவிடாதவன்.

2. யோகம்-கர்மயோகம். நசை-பலாதிஸங்கல்பம்.

3. ஞானயோகம்-ஆத்மயோகம். நயந்து அறவேண்டும்-விரும்பி மிகவும் அடையவேண்டுகின்ற. முதல்-ஸாதனம். சமம்-நிவ்ருத்தி.

4. கூட்டும் கருமம்-ததர்த்தமான கர்மம். நசை-ஸங்கம்.

5. எடுப்பான்-கரையேற்றுவான். தளர்விக்க-கீழே நழுவவிட. யான்பகை-பெரியபகை.

6. ஆன்ற-அடங்கிய. மாறே இயலும்-விபரீதமாகவே வர்த்திக்கும்.

7. சிறப்பு இகழ்வு-மான அவமானம். அமைவு சேர்ந்து-அடக்கம்பொருந்தி.

8. விவேகம்-விஞ்ஞானம். உகத்தல்-திர்ப்தியடைதல். ஓட்டிற் கற்கனகத்து ஒத்தியல்வான்-ஓட்டிலும் கல்லிலும் பொன்னிலும ஒத்திருப்பவன். காட்சி-யோகம். ஒற்கம்-தாழ்மை.

9. நன்னெஞ்சன்-நல்லது நினைக்குமஸுஹ்ருத்துக்கள். தோழன்-ஸமவயதான தோழன். நயப்பறியான்-வெறுப்பு உகப்பு இல்லாத உதாஸீனன். நடுவோன்-மத்யஸ்தன். பழிவெறுப்போன்-பழிக்கத்தக்க த்வேஷ

முடையவன். உயர்கருமர்-ஸாதுக்கள். ஒத்தமனம்-ஸமபுத்தி.

10. தானேயிருந்து-ஏகாகியாயிருந்து. தனிஇடம்-ஏகாந்தமான இடம்.

11. தூயநிலம்-பரிசுத்த ஸ்தானம். துகில்-துணி. ஒக்கம்-உயர்வு. தோல்-மான்தோல். குசம்-தர்ப்பை. சுத்திபெற-ஆத்மசுத்தியைப் பெறும்பொருட்டு. ஒருமித்து-ஒன்றை நாடியதாகச்செய்து. ஒக்கந்தாழ்வற்றவாசனம் எனக்கூட்டுக.

12. காயம்சென்னி களம்-உடலையுந் தலையையும் கழுத்தையும். முன்காண மூக்கைக்கண்-கண் முன் மூக்கைக்காண என மாறுக. முன்மூக்கு-நுனிமூக்கு. ஆறி-மனமடங்கி. அஞ்சாதே-ஸாம்ஸாரிகமான உபத்ரவத்திற்குப் பயப்படாமல். அறம்-பிர்ஹ்மத்தை நாடுகிறவிரதம். உரனாய்-உறுதியுள்ளவனாய். விருப்பான்-விருப்பத்தையுடையனாயிருப்பான்.

13. மன்னேர்ந்த என்னுமிடத்து மன் என்பது மத் என்னும் வடமொழி திரிந்ததென்றலுமாம். 'மத்ஸம்ஸ்தாம்' என்பது கீதையிலுள்ள வாக்கியம்.

14. கடிந்தோன்-தூக்கத்தை வெறுத்தவன்.

15. இயற்றி முயற்றி உணர்த்தி-தொழிற்பெயர்கள். ஸஞ்சாரமும் சேஷ்டையும் உணர்ச்சியுமென்க.

17. இலாதிடத்து-இலாத இடத்து. இலாத என்பதில் அகரம் விகாரத்தாற் றொக்கது.

18. எதில்-எதில். நிருத்தம்-தகையப்பட்டது.

19. யோகத்து-யோகத்தினிடத்தில். நுகர்தல்-அநுபவித்தல்.

20. பேறு-லாபம். மிகுதென்று-அதிகமானதென்று.

21. திசைப்பற்ற-கலக்கமற்ற. ஒன்றல்-ஒன்றுபடுதல்.

22. தன்னிலாம்-தன் ஸங்கற்பத்தாலுண்டான.

23. தீங்கு-தோஷம். செருக்கு-ரஜோகுணம்.

24. செற்று-நீக்கி.

28. நாமம்-பெருமை. முன்னல்-ஆலோசித்தல்.

29. அமர்விசயன்-போரில் வல்ல அர்ஜுனன்.

30. சுரிசங்கன்-வளை தலையுடைய சங்கத்தையுடையான்; கிர்ஷ்ணபகவான்.

31. காரார் கொடை—மேகத்தை யொத்த ஈகை. துறவு-வைராக்கியம். அது-மனம்.

32. இசையா-அடக்கப்படாத. யோகம சார்வரிது என்க. என் இசைவு-என் கொள்கை.

33. விருப்புற்றான்-சிரத்தையுள்ளவன். இயல்வு-பிரயத்னம். பாங்கு-நேர்த்தி. அதுசேராது-யோகஸித்தியையடையாமல். அடையும்-அடைவான்.

34. சின்னமாம் மஞ்சு-துண்டுபட்ட மேகம்.

35. துக்க பரிசு அறுக்க-தகுந்தவிதமாகப்போக்க.

36. பொல்லாநெறி-துர்கதி.

37. தூயார் சிறந்தமனை-பரிசுத்தர்களது சிறப்புற்ற குடியில். சிதைந்தான்-நழுவியவன்.

38. உதயமாம்-பிறப்பான். பிறவி-ஜன்மம். அரிது-துர்லபம்.

39. பற்றி-அடைந்து. அதில்-யோகஸித்தியில்.

40. மன்னுநசை யோகத்திலுற்றான்-அறிய முயல வேண்டுமென்னுமாசையை யோகத்தினிடமாக வுள்ளவன். உறைசேர் பிரமம்-சப்த பிர்ஹ்மம்: பிரகிருதி தத்துவம். மீதியல்வான்-மேலான ரூபத்தையடையப் பெறுவான்.

41. தன்மையுணர்ந்தார்-ஞானிகள். யோகி- தபசிகள், ஞானிகள், கர்மஞ்செய்பவர் என்கிற இவர்களெல்லாரையும்விட அதிக மேலானவன் என்க.

43. உயிர்யோகி என்பதை உயர்யோகி யெனத் திருத்திக்கொள்க. முற்றம்-எல்லாருக்குள்ளும்.

ஞானங்களை. செவ்வாம் மறைப்பொருளை—செவ்வை யான ரஹஸ்யார்த்தங்களை. செப்பினேன்—உபதேசித் தேன. நின் இயல்வால்—உன் அதிகாரத்துக்குத் தக்கபடி.

64. இட்டன்—இஷ்டன். இதமாப் பட்டதனை—இதமாகவுள்ளதை. பரிந்துசொல்வன்—பரிவாகச் சொல்லுவேன்.

65. என்பத்தன் ஆகி—என்னிடத்தில் பிரீதிமானாய்க் கொண்டு. என்னை மனனம் பண்—பிரீதிரூபமாயிருக்கிற ஸ்மிருதி பரம்பரையைச் செய். [வேதநம், தியானம், உபாஸனம் முதலிய சொற்களுக்குப் பொருளாய், தரிசனத்துக்கு ஸமானமாயிருக்கும் மிகுந்த பிரீதிரூபமாயிருக்கும் ஸ்மிருதி பரம்பரை யென்க.] அருச்சி—ஆராதனஞ்செய். ஆராதனமாவது—பரிபூர்ண சேஷவிருத்தி. என்னையே மேவுதி—என்னையே யடைவாய். அறுதி—நிச்சயம்.

66. எல்லா அறங்களையும் அறவிட்டு—கர்மயோகம், ஞானயோகம், பக்தியோகம் என்கிற மோக்ஷஸாதனங்களான எல்லாத் தர்மங்களையும் என்னுடைய ஆராதன ரூபமாக மிகுந்த பிரீதியோடு உன் அதிகாரத்துக்குத் தக்கபடி செய்துகொண்டே, கீழ்ச்சொன்ன

படி பலனையும், கர்மத்தையும், கர்த்திருத்வத்தையும் விட்டு. என்னையே சரணமா நண்ணியிடு—ஆராத்ய ஸ்வரூபனான என்னையே பலமாகவும் உபாயமாகவும் கருதிச்சரணம்புகுவாய். நான் பாவங்களினின்றுன்னைப் பற்றுவிடுவிப்பன்—(என்னையடைதற்கு விரோதிகளாய், அநாதி காலமாய் ஸம்பாதிக்கப்பட்டவைகளாய்ச் செய்யத் தகாவற்றைச் செய்கையும், செய்யத்தக்கனவற்றைச் செய்யாமையுமான) ஸகல பாவங்களினின்றும் நான் உன்னைப்பற்றுவிடுவிப்பேன். தாவந்தனை ஒழி—(ஆகையால்) நீ சோகத்தைவிடு. [பக்தியோகத்தையாரம்பிக்கவொட்டாமல் விரோதிக்குமவைகளாய் அநாதிகாலமாய் ஸம்பாதிக்கப்பட்டவைகளாய் நாநாவிதங்களாய் அனந்தங்களாயுள்ள பாபங்களுக்குத்தக்க பிராயச்சித்த ரூபங்களாயும், கிருச்சிரம், சாந்திராயணம், கூச்மாண்டம், வைச்சுவாநரம், வ்ராதபிவித்திரேஷ்டி, த்ரிவ்ருதக்நிஷ்டோமம் தொடங்கிப் பலவிதங்களாயும் அனந்தங்களாயும் எத்தனை காலம் ஜீவித்திருந்து அனுஷ்டித்தாலும் அனுஷ்டிக்கவரியவைகளாயுமிருக்கின்ற ஸர்வதர்மங்களையும் விட்டு, பக்தியோகாரம்பம் ஸித்திப்பதற்காகப் பரமகாருணிகனாய்ப் பிராணிகளிடத்தில் ஒரு விசேஷத்தையும் ஆலோசியாமல் அவைகளுக்கெல்லாம் சரணியனாய் ஆச்ரிதர்களிடத்திலுண்டான வாத்ஸல்யத்துக்குக் கடலாயிருக்கின்ற என்னையே சரணாகப்

பற்று. நான் உன்னைக் கீழ்ச்சொன்ன பக்தியோகா ரம்பத்திற்கு விரோதிகளான பாபங்களினின்றும விடு விக்கின்றேம். நீ அதற்காகச் சோகிக்கவேண்டாம் என்று உரைத்தலுமுண்டு.]

67. இப்பொருளை—(இப்போது நான் உனக்குச் சொன்ன பரமரஹஸ்யமான) இந்த அர்த்தத்தை. இல்லாத் தவத்தாற்கும்—இல்லாத தவத்தையுடையா னுக்கும் அதாவது தவம்புரியாதவனுக்கும். என்னைப் பொறுதாற்கும்—என் குணஙகளைக் கேட்க ஸஹிக்காத வனுக்கும்.

68. மிகவும் ரஹஸ்யமான இவ்வர்த்தத்தை யாவ னொருவன் என் பக்தரிடத்தில் பரிவோடு சொல்லுகி றானே அவன் என்னிடத்தில் மிகுந்த பக்தியைச்செய் து ஸந்தேகமில்லாமல் என்னையடைவான்.

69. அவனின்—அவனைப்போல. மேதினியில்— பூமியில். இனியும் உண்டாகப்போவதில்லை யென்பார் எக்காலுமில்லை யென்றார். [அயோக்கியர்களை முந்தி யெடுத்தது. இவ்வர்த்தததை யோக்கியர்களுக்குச சொல்லாமலிருப்பதைப் பார்க்க அவர்களுக்குச்சொல் வது மிகவும் அனிஷ்ட மென்கைக்காக வென்க.]

70. நெஞ்சறிவாம் எச்சம்—ஞானயோகம். இறை ஞ்சினன்—ஆராதித்தான். எஞ்சலற—குறைவற.

Dr. U. V. SWAMINATHA
TIRUVANMIYUR

71. சிரத்தையினைச் சேர்ந்து–சிரத்தையோடு கூடி. ஆர்ந்து—விரும்பி. தீர்ந்து துயரற்று–பக்தி விரோதி பாபங்களினின்றும் விடுபட்டுத் துயரமில்லாதவனாய். மகிழும்—ஸந்தோஷிப்பான்.

72. ஒருமைபற்றியாஞ் சித்தத்தால்–ஏகாக்ரசித்தனாய். சேர்க்க–பெருமைபொருந்த. கழிந்ததே–போயிற்று? இங்கு ஏ, வினாப்பொருளது. சேர்ப்பான்—வினையெச்சம்; சேர்க்கக் காரணமாய் என்பது பொருள்.

73. உன்னுடைய பிரஸாதத்தால் விபரீதஜ்ஞானம் போய் ஞானத்தைப் பொருந்தி மயக்கத்தை யொழித்தேன். சொன்னதெல்லாஞ் செய்வேன் என்க. [தேகாதிகளே ஆத்மாவென்கிற துரபிமானமும், சேதனாசேதன ரூபமான ஸகல பிரபஞ்சமும் பரமபுருஷனுக்குச் சரீரமென்கிற விஷயமுந்தெரியாமல் மாறாக நினைத்திருந்த துரபிமானமும், நித்திய நைமித்திகமான கர்மம் பரமபுருஷனுடைய ஆராதன ரூபமாக அனுஷ்டிக்கப்படுமாகில் அவனை யடைவதற்கு உபாயமாகுமென்கிற விஷயந்தெரியாமல் அதைக்கட்டுக்குடலாக நினைத்திருந்த அஜ்ஞானமுந் தொலைந்தன. ஆத்மா பிரகிருதியின் ஸ்வபாவமின்றி அறிவதே ஸ்வபாவமாய்ப் பரமபுருஷனுக்குச் சேஷப்பட்டு அவனாலாளப்படுவதே ஸ்வரூபமாயிருக்கிறதென்கிற ஞானமும், பரம

புருஷனுடைய உண்மையை யறியும்படியான ஞானமும், பரமபுருஷனுக்குப் பிரீதியை வளர்ப்பதான நித்திய நைமித்திக கர்மங்களை யனுஷ்டித்து நிஷித்தங்களை யொழிப்பதாலும், சமம், தமம் முதலிய ஆத்மகுணங்களாலும் பெறவேண்டிய (பக்திரூபமாய்ப் பரிணமித்திருக்கிற) பரமபுருஷோபாஸனத்தால் மாத்திரம் அடையப்படும் பொருளும், வேதாந்த விழுப்பொருளும், பரம புருஷனுமான வாஸுதேவன் தேவரீரே யென்கிற ஞானமும் எனக்கு உண்டாயின என்பதாம்.]

74. இப்படி மகாத்மாவான வாஸுதேவனுக்கும் பார்த்தனுக்கு முண்டான அற்புதமாய் ரோம ஹர்ஷணமான இந்த ஸம்வாதத்தை நான் கேட்டேன் என்க. செவ்வணனம் என்றும் பாடம்.

75. யோகத்தை நேரேயருளிச்செய்கிற யோகேசுவரனை கண்ணன் பக்கல் நின்றும் இந்தப் பரமான குஹ்யதமத்தை வியாஸ மகரிஷியினுடைய பிரஸாதத்தாலே கேட்டேன் என்க.

76. ராஜாவே! கேசவார்ஜுனர்களுடைய, புண்யமாய் அத்புதமான இந்த ஸம்வாதத்தை நினைக்க நினைக்க எனக்கு ஸந்தோஷமுள்ளடங்காமல் வருகின்றது என்பதாம்.

77. கிருஷ்ணனுடைய அத்புதமான அந்தரூபத்தை நினைக்க நினைக்க எனக்குப் பெரிய விஸ்மயமுண்டாகா நின்றது. பின்னையும் பின்னையும் பிரீதனாகா நின்றேன் என்க.

78. எங்கே யோகேசுவரனான ஸ்ரீகிருஷ்ணபகவான் எழுந்தருளியிருக்கின்றானோ, அவன் திருவடிகளையே நம்பியிருக்கின்ற வில்லுங்கையுமான அர்ச்சுனன் எங்கே விளங்குகின்றானோ அங்கே தான் லக்ஷ்மியும், விஜயமும், விபூதியும், நீதியும் சாசுவதமாய் நிலைநிற்கும் என்பது என்னுடைய ஸித்தாந்தம்.